198 2

# பிராமணப்பத்திரிகை

ஏப்ரல், மே. 1932

இதழ்-2 எண்-7, 8

DIGITIZED

JL
Y31m211, N30
N32. 27-8
160214

இதழ் II.

ரிஜிஸ்தர் நே. M. 2623.

நெ. 7

# 'கிராமப் பஞ்சாயத்து.'

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

ஏப்ரல் 1932

பிரசுரஞ் செய்வோர்.

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை.

# அடக்கம்.

பக்கம்.

1. பஞ்சாயத்துகள்—முக்கியமான கிராம வேலை ... 119
2. பத்திராதிபரின் குறிப்புகள் ... ... ... 124
3. இந்திய சாமான் பிரசார சங்கம் ... ... ... 128
4. பூதக்கண்ணாடிக் காட்சிக் கருவிகள் ... ... 131

## சந்தா விவரம்.

பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு ரூபாய் 2.
மற்றவர்களுக்கு ... " 3.
தனிப்பிரதி ... அணா 4.

## விளம்பர விகிதம்.

சஞ்சிகை மானேஜருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்,
சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,
ராயப்பேட்டை, சென்னை.

7 - JUL 19

# கிராமப் பஞ்சாயத்து.

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் II] · 1932ஹு ஏப்ரல்மீ [இலக்கம் 7.

## பஞ்சாயத்துகள்—முக்கியமானக் கிராம வேலை.

பண்டை காலத்தைப் பெருமையாகக் கூறுவதும், தற்கால வாழ்க்கையை இகழ்வதும், வருங்காலம் நன்றாயிருக்கக்கூடுமென்று எதிர்பார்ப்பதும் மாந்தருக்கியல்பான குணமாகும். பஞ்சாயத்துகள் சம்பந்தமாகவும் சிலரிடையே இதே சுபாவம் தோன்றுவதைக்கவனிக்கலாம். 1920-ம் வருஷ மியற்றப்பட்ட பழைய பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழனுபவிக்கப்பட்டு வந்த சில உரிமைகள் இப்பொழுது எடுபட்டுவிட்டதாக எண்ணிவரும் ஜனங்களும் சிலரிருக்கின்றனர். குடி மாராமத்து விஷயம் இதற்கோர் உதாரணமாகக்கூறப்படுகிறது. கிராமங்களில் ஜனங்களால் மாமூலாகச்செய்யப்பட்டு வந்த ஊழியமாகிய குடி மாராமத்தின் சில முக்கிய அம்சங்கள், அப்பொழுதிருந்ததையும், இப்பொழுதுள்ள வகையையும் சற்று விரிவாக இங்கு கவனிக்கவேண்டியதவசியமாகிறது.

குடி மாராமத்தென்றால் என்ன? கிராமங்களில் நீர்ப்பாசன வடிகால் சீர்திருத்த வேலைகள் சம்பந்தமாக அவ்வூர் வாசிகள் மாமூலாகச் செய்து வரும் ஊழிய சாம்பிரதாயத்திற்குக் குடி மராமத்தென்று வழங்கப்படுகிறது. இவ்வித வேலைகள் சிலவற்றை ஆயக்கட்டுதார்கள் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றனர். இவ்வித மாமூல் சம்பந்தப்பட்ட அலுவல்கள் சில பின் வருமாறு:—

(1) குழிகள், வெடிப்புகள், துவாரங்கள், மேடு பள்ளங்களை மூடி நிரவவேண்டியது,

(2) சப்பாத்தி, வேலி பருத்தி, செடி, கொடி, புதர்கள், அடைசல்களை எடுத்து அப்புறப்படுத்துவது,

(3) வாய்க்கால்களின் மடவாய்களில் தேங்கி நிற்கும் மணல்வதிகளை வாரி யெடுப்பது,

(4) ரிவெட்மெண்டு, அணைகள், கலிங்கல்கள், கரை ஓரங்களில் சரியாகப்பதிக்கப்படாமல் போடப்பட்டுள்ள கற்கள் முதலியன நழுவிப் போயிருந்தால் அவற்றைச் சரியான இடங்களில் எடுத்துப் பாவுதல்,

(5) கலிங்கல்களில் செங்குத்தான கற்களுக்கிடையேயுள்ள இடங்களில், மராமத்திலாகா, ரெவினியூ இலாகாக்களினால் அனுமதிக்கப்பட்ட அளவு சுத்தமாக வைக்க ஏற்பாடு செய்தல்,

(6) அந்தந்தக் கிராமங்களில் சகஜமாக அனுஷ்டானத்திலிருந்து வரும் சம்பிரதாயமான பொது வேலைகளைச் செய்தல், முதலியனவாகும்.

குடி மராமத்து சம்பந்தப்பட்ட சட்ட அனுஷ்டானங்கள் இவ்வாறென்று, சம்பிரதாயமான தொழில்கள் யாவையென்பதை விதிக்கும் லேபர் ஆக்டில் காணப்படும் ஒரு பிரிவைத் தழுவி போர்டு நிரந்தர விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இத்தகைய வேலைகள் ஆயக்கட்டுதார்கள் பொதுவாகச் சேர்ந்து அவர்கள் சம்மதத்தின்பேரில் செய்துவரப்படுகின்றன. இவை அவர்கள் தாமாக மனமுவந்து செய்யும் வேலையே தவிர வேறில்லை. குடி மராமத்து வேலை எந்த விடத்திலேனும் பாக்கி நின்றுவிட்டால், அந்தப் பிரதேசத்தில் வேலைசெய்யக் கடமைப்பட்டவர்களிடமிருந்து வேலைக்குள்ள கூலியை இரட்டித்து விதித்து அத்தொகையைக்கொண்டு பாக்கி நின்ற வேலையைப் பூர்த்திசெய்ய ரெவினியூ இலாகாவிற்கு கஸ்டமரி லேபர் ஆக்டில் அதிகாரமிருக்கிறது. இவ்விஷயம் என்ன விதமாயிருப்பினும், கிராம வேலை செய்யும் விஷயம் ஆயக்கட்டுதார்களின் சம்மதத்தைப் பொருத்ததாகையால், அவர்கள் சேர்ந்து பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் கொடுப்பார்களேயாகில், பஞ்சாயத்துகள் வேலை செய்யவேண்டியவர்களைக்கொண்டு காரியத்தை நடத்திவரக்கூடும். பழையச் சட்டப்பிரகாரம் ஏற்பட்ட பஞ்சாயத்துகள் பின் வருமாறு நடந்துகொள்ளவேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்ததைக் கவனிக்கவும்.

"நீர்ப்பாசன வேலை விஷயமாகக் குடி மராமத்து வேலையைக் கட்டாயப்படுத்திச் செய்ய எந்த பஞ்சாயத்தேனும் விரும்புமேயாகில், அப்பஞ்சாயத்து அந்த இடத்திலுள்ள நீர்ப்பாசன வசதிகளால் சௌகரியமடையும் ஆயக்கட்டுதார்களை முதலில் கூட்டவேண்டும். அக்கூட்டத்தில், பிரஸ்தாப நீர்ப்பாசன வேலைகளை நடத்துவதற்குக் கட்டாயப்படுத்தி, குடி மராமத்து வேலை வாங்குமதிகாரம் பஞ்சாயத்திற்களிக்கப்படுவதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படவேண்டும். அப்பால் பஞ்சாயத்தின் விசேஷக் கூட்டமொன்றைக் கூட்டி, மேற்சொல்லிய தீர்மானப் பிரகாரம் தங்களுக்களிக்கப்பட்டுள்ள கடமையை நிர்வகிக்க ஒப்புக்கொள்வதாகப் பஞ்சாயத்து ஒரு தீர்மானம் நிறைவேற்றிக்கொள்ளவேண்டும்."

இவ்வாறு செய்தபிறகு பின்வரும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டு [illegible] சட்டம் விதித்திருந்தது. செய்யவேண்டிய வேலைக்காகும்

16214





செலவைப் பஞ்சாயத்து முதலில் கணக்கிடவேண்டும். அக்கணக்கில் ஏற்படும் தொகையை எல்லா ஆயக்கட்டுதார்களிடையே பங்கிடவேண்டும். பஞ்சாயத்தில் ஆயக்கட்டுதார்களுக்கேற்ற பிரதிநிதித்துவமில்லாமலிருப்பின், அவர்களுடைய கமிட்டியொன்று நியமிக்கப்படவேண்டும். மேற்கூறிய ஈவுப்பிரகாரம் ஒவ்வொருவரும் செலுத்தவேண்டிய பாகத்தை வரியாகப் பாவித்து, வரியைப்போல் வசூலிக்கவேண்டும். ஆயக்கட்டுதார்கள் பணம் கொடுப்பதற்குப் பதிலாக வேலை செய்ய ஒப்புக்கொண்டால் அவ்விதமாகக் கிடைக்கும் வேலையாள்களைக்கொண்டு குறிப்பிட்ட வேலையை நடத்தி வரவேண்டும்.

புதிய சட்டப்பிரகாரமும் இந்நிலைமை எவ்வழியிலும் மாறவேயில்லை. புதிய ஆக்டு 65-வது பிரிவின்கீழ் தனிப்பட்ட நபர்களோ, ஜனங்களோ சேர்ந்து பஞ்சாயத்திடம் எவ்வேலைப் பொறுப்பையும், அப்பஞ்சாயத்துச் சம்மதத்தின்பேரில் விடலாம். இவ்விதமாகக் கிடைக்கும் அதிகாரத்தை அப்பஞ்சாயத்துகள், எந்த நிபந்தனைகளின்பேரில் பெற்றுக்கொள்ளுகிறதோ அந்நிபந்தனைக்குட்பட்டு மாகாண கவர்ன்மெண்டினால் ஏற்படுத்தப்படும் விதிகளுக்கிணங்க நிர்வகிக்கவேண்டும். இதில் மூன்று முக்கிய விஷயங்களடங்கியிருப்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டும். முதலாவது தனிப்பட்ட நபர்கள், அதாவது ஆயக்கட்டுதார்கள் குடி மராமத்து வேலையைப் பஞ்சாயத்திடம் ஒப்புவிக்கிறார்கள். இவ்வேலைப் பொறுப்பை நிர்வகிக்கும் கடமையைப் பஞ்சாயத்து ஏற்றுக்கொள்ளுவது இரண்டு. கவர்ன்மெண்டு இவற்றிற்கேற்ற விதிகள் இயற்றுவது மூன்று. இவ்விஷயமாகப் புதிய சட்டத்தின்கீழ் விதிகள் இன்னும் ஏற்படவில்லை. இந்த மூன்றாவது அம்சக் குறைவினால் பஞ்சாயத்து மேற்கொள்ளும் வேலைத் தடைப்படவேண்டியதில்லை. பொதுவான வேலைகளுக்காக நிலவரித் தொகையில் ரூபாய்க்கு இவ்வளவு அல்லது ஏக்ராவிற்கு இவ்வளவு என்று வரி விதிக்கும் அதிகாரத்தைப் பஞ்சாயத்துகள் உபயோகிக்கக்கூடாதென்று பழைய சட்டத்தின் கீழே கவர்ன்மெண்டார் உத்தரவு பிறப்பித்திருந்தார்கள். ஆனால், குடி மராமத்துச் சம்பந்தப்பட்டவரையில் நிலச்சுவான்தார்கள் அவர்களுடைய நில அபிவிருத்தி வேலையைச் செய்துவரும் பஞ்சாயத்திற்குச் செலுத்த வேண்டிய குடி மராமத்துக்குப் பதிலாகக் கூலிக்கிரயத்தை (ஒவ்வொருவருடைய நிலத்தின் அளவிற்கேற்ப) விதித்து வசூலித்துக்கொள்ளலாமென்று கவர்ன்மெண்டு உத்தரவிட்டிருந்தனர். ஆயக்கட்டுதார்களின் தீர்மானத்தை யனுசரித்துப் பஞ்சாயத்துக் குடி மராமத்து வேலையை நடத்தும் பொறுப்பை வகித்துவிட்டால், அவ்வேலையைச் செம்மையாக நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டியதவசியமாகிறது. இவ்வேலைக்காக வசூலிக்கும் தொகை தனிப்பட்ட நபர்களிடமிருந்து பெறும் சந்தாவென்றே கருதப்படவேண்டும். இவ்விதமாகக் கவனிக்குமிடத்து, இது

சம்பந்தமாக, வரி விஷயங்களில் காணப்படும் நிபந்தனைகளை யனுசரிக்க வேண்டியதனுவசியமென்றும் ஏற்படுகிறது.

தச்சன், கருமான், இடையன், நாவிதன், வண்ணான் முதலிய பலர் செய்யவேண்டிய மாமூல் வேலை விஷயமாகவும் இதே மாதிரிதான் செய்ய வேண்டும். இவற்றைப்பற்றியவரையில் அந்தந்த ஊரிலுள்ள சம்பிரதாயங்களைப் பஞ்சாயத்தார் விசாரித்தறிந்து அவற்றை எழுதி வைக்கவேண்டுமென்று பழைய சட்டத்தில் விதிக்கப்பட்டிருந்தது. இவ்விதமாக எழுதி வைத்தபிறகு அந்தக் கிராம வாசிகள், அங்குள்ள ரயத்துகள், அதிகாரிகள், வேலையாட்கள், பிரஸ்தாபிக்கப்படும் தொழிலிலீடுபட்டிருப்பவர்கள் ஆகிய பலருமடங்கிய மகாசபையொன்றைப் பஞ்சாயத்தார் கூட்டவேண்டும். கூட்டத்தில், அக்கிராமத்தில் சம்பிரதாயமாக அனுஷ்டானத்திலிருந்து வரும் வழக்கத்தை யனுசரித்து அதிகாரிகள், வேலைக்காரர்கள், தொழிலாளிகள் முதலியோர்கள் கிராமத்திற்குப் பொதுவாகச் செய்துவரும் வேலையை இனி நிர்ப்பந்திக்கும் பொறுப்புப் பஞ்சாயத்து வகிக்கவேண்டுமென்றும், அவ்வேலைக்காரர்கள் முதலியவர்களுக்கு மிராசுதார்களும் ரயத்துகளும் மேரம் கொடுத்துவரவேண்டுமென்றும் தீர்மானிக்க உத்தேசமென்பதைத் தெரியப்படுத்தவேண்டும்." மகாசபை அத்தீர்மானத்தை அங்கீகரிக்கவேண்டும். பஞ்சாயத்துப் பிறகு அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். இவ்விதமாகச் செய்தால் வேலைப்பொறுப்பைப் பஞ்சாயத்து நிர்வகிப்பது சுலபமாகிவிடும்.

முன் காலத்தில் எல்லா வேலைகளுக்கும் இனாம்கள் வழங்கப்பட்டு வந்தன. கிராமங்களில் அவ்வூர் வாசிகளுக்குத் தேவையான யாவும் கிடைத்து வந்தன. இப்பொழுது அநேகமாக இனாம் என்றும் வழக்கம் போய்விட்டது. இருந்தாலும் வேலைகள் நடைபெற்றாகவேண்டி யிருக்கிறது. இவற்றைத் தள்ளமுடியவில்லை. சில கிராமங்களில் வண்ணான், தச்சன் இல்லாக்குறையினால் ஏற்படும் கஷ்டம் சகிக்கமுடியவில்லை. இதை நிவர்த்திப்பதற்காகத்தான் மேரம் கொடுப்பதென்ற வழக்கம் ஏற்பட்டது. வேலைக்காரர்கள் வேலை செய்வதும், அவர்களுக்கு மேரம் கொடுபடும் வழக்கமும் ஒழுங்காக நடைபெறவில்லை. ஆகையினால், பழைய அனுஷ்டானங்கள் தவறிப்போன குறைகளை நிவர்த்திக்கப் பஞ்சாயத்துகள்மூலம் மேரம் கொடுத்து வேலை வாங்கப்பட்டுவந்தால் கிராமங்கள்தோறும் புதிய எழுச்சி தோன்ற பரஸ்பர சகாயம் ஏற்பட வழி பிறக்கும். காரியம் நடப்பதும் சுலபமாகும். இதில் சம்பந்தப்பட்டவர்கள், மிராசுதார்கள், ரயத்துகள், வேலைக்காரர்கள் ஆகிய மூவருமே. இவர்களில் முன் கூறப்பட்டவர் மேரம் செலுத்தவேண்டியது, பின் கூறப்பட்டவர் வேலைகளைச் செய்யவேண்டியது. இவர்கள் ஒன்றாகக் கூடித் தங்கள் பொறுப்பைப்





பஞ்சாயத்து வசம் விட்டால், பஞ்சாயத்தும் அதை ஏற்றுக்கொண்டு 65-வது பிரிவின்கீழ் இக்கடமையைச் செய்துவர இடமிருக்கிறது. ஜாதிக் கட்டுப்பாடு - வேலை நிர்மாண சம்பந்தமாக சியாவளிப் பஞ்சாயத்தில் (P B. Vol. I & II) தயாரிக்கப்பட்டுள்ள உபவிதிகள் பிரயோஜனப்படத் தக்கன.

இவ்வளவு தூரம் விரிவாக எழுதியிருப்பதிலிருந்து, கிராம வேலைக் கட்டுப்பாடு விஷயமாக 65-வது பிரிவின்கீழ் சர்வ அதிகாரமுமிருப்பது விளங்கும். ஜனங்கள் மனமுவந்துத் தங்களுடைய அதிகாரத்தைப் பஞ்சாயத்திடம் மாற்றிப் பஞ்சாயத்தும் அதை நிர்வகிக்க முன்வந்து, மாகாண கவர்ன்மெண்டும் இவ்வேலை நடப்பதற்குபகாரமாக விதிகள் முதலியன செய்து கொடுக்குமேயாகில், இவ்வழியில் செய்யக்கூடிய வேலைக்கோர் எல்லையில்லை. கிராம ஊழியங்கள், குடி மராமத்து ஆகிய இரண்டு அம்சங்கள் மாத்திரம் இங்கு உதாரணமாக எடுத்து விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. இதைப்போல் வேறு பலவேலைகளையும் குறிப்பிடலாம். உற்சவாதிகளையும் இவ்வாறே நடத்தலாம். விவசாய சம்பந்தமாகக் கிராமத்தில் பொதுவாக ஒரு மனையை எடுத்துக்கொண்டு பரீக்ஷார்த்த சாகுபடி செய்துகாட்டலாம். பயிர்களைப் பாதுகாக்கக் காவல் போடலாம். பொலி காளைகளை வளர்க்கலாம். மொத்தமாகக் கூறின், பழைய சட்டத்தின்கீழ் சாத்தியமான சகல வேலைகளையும் புதிய சட்டத்தின்கீழும் செய்துவரலாம். இது மாத்திரமில்லை. புதியச் சட்டத்தில் 65-A, 65-B, 65-C முதலிய பிரிவுகள்மூலம் காடு நீர்ப்பாசனமுள்பட கிராம நிர்வாகம் பூராவிலும் சர்வ பஞ்சாயத்துகள் அதிகாரம் வகிக்கச் சட்டசபை உத்தேசித்திருக்கிறது. மாகாண கவர்ன்மெண்டு, பஞ்சாயத்து, கிராமத்து ஜனங்கள் யாவரும் சேர்ந்து பரஸ்பரம் ஒத்துழைக்கவேண்டியதவசியம். மேற்கூறிய நோக்கம் கைகூட இந்த ஒரு நிபந்தனையே அவசியமென் றேற்படுகிறது. இவ்வித ஒத்துழைப்பு மனப்பூர்வமாகவும் உபயோகமாகவு மேற்படவேண்டுமென்பதே எல்லாப் பஞ்சாயத்து அபிமானிகளுடைய மனமார்ந்த பிரார்த்தனையுமாகும்.

———

## பத்திராதிபரின் குறிப்புகள்.

**செய்யாறுத் தாலுகாப் பஞ்சாயத்துகள்.**

செய்யாறு தாலுகா போர்டு எல்லைக்குள்பட்ட பஞ்சாயத்துகள் வேலை செய்துவரும் விவரத்தைக் குறிப்பிட்ட யாதாஸ்து சென்ற மாசம் இப்பத்திரிகையில் விரிவாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதைக் கவனித்தால், அந்த எல்லைக்குள் 429 பெரியக் கிராமங்களிருப்பது விளங்கும். 1930-31-ம்வருஷம்முடிவில் அங்கேற்பட்டிருந்த கிராமப் பஞ்சாயத்துகள் மொத்தம் 290. அதாவது மூன்று கிராமங்களுக்கு 2 பஞ்சாயத்துகள் வீதம் அமைந்திருப்பது புலப்படுகிறது. இது மிகவும் உயர்வான நிலைமையை யுணர்த்துகிறது. இவ்வளவிலும் மொத்தம் 28 பஞ்சாயத்துகள்தான், அதாவது 100-க்கு 10 வீதமே, சரிவர வேலை செய்யவில்லையென்றிருப்பது மற்றோர் முக்கிய சமாசாரம். இம்மாகாணத்தில் இதர இடங்களுக்கு இவ்விடம் பழுதாகவில்லையென்பதை இது காட்டுகிறது. அந்த ரிபோர்டில் பலவிடங்களில் யோசனைவாய்ந்த அபிப்பிராயங்கள் பல கூறப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கவர்ன்மெண்டு கவனிக்குமென்று நாம் நம்புகிறோம். தேர்தல் வாக்குரிமை விஷயமாகப் பழைய சட்டத்தில் காணப்பட்ட பிரிவுகள் எப்பொழுதும் அனுஷ்டானத்திற்கு வரவேண்டுமென்பது அவ்வபிப்பிராயங்களுள் ஒன்றாகும். அந்த ரிபோர்ட்டில் தெரிவித்துள்ளவண்ணம் "பற்பல வகுப்பினரும் சேர்ந்து மனமொத்து நியமித்த அபேக்ஷகரே மிகத் தகுதியானவர் என்பது முந்திய வருஷங்களில் நடைபெற்ற தேர்தலின் அனுபவம்" என்றேற்பட்டிருக்கும் பக்ஷத்தில் அந்தப் பழைய வழக்கத்தை நீடிப்பதே மிகவும் திறமையான கொள்கையாகும். பட்டிணங்களில் உசிதமெனத் தோன்றும் முறைகள் கிராமங்களுக்கேற்றவையாகாமலும் அனாவசியமாகவுமிருப்பதனால் இந்தச் சிக்கலான முறைகளைக் கைப்பற்றாமலிருப்பது நலமாகும். கவர்ன்மெண்டினால் ஆங்கிலத்தில் பிறப்பிக்கப்படும் பற்பல உத்தரவுகளும் தாலுகா போர்டுகளுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பஞ்சாயத்துகளுக்கு அனுப்புவிப்பதைவிட, முக்கியமான அறிக்கைகளை மாத்திரம் பொறுக்கி, அவற்றைத் தாய்பாஷைகளில் மொழிபெயர்த்து லோகல் போர்டு இன்ஸ்பெக்டர்மூலம் பஞ்சாயத்துகளுக் கனுப்பலாம் என்று அந்த ரிபோர்டில் கூறப்பட்டிருக்கும் யோசனையை கவர்ன்மெண்டு பின்பற்றுவது சுலபமாகவிருக்கும். குடி மராமத்து விஷயமாகவும், வேலைசெய்ய முடியாதவர்கள் தங்கள் வேலைக்குப்பதிலாக அதற்காகும் கூலியைக் கொடுக்கச் செய்யலாமென்னும் வழக்கத்திற்குக் கவர்ன்மெண்டு ஆதரவளிக்க மறுப்பதையும் பற்றி, அந்த ரிபோர்ட்டில் கூறப்பட்டிருக்கும் அபிப்பிராயத்தைக்குறித்து இப்பத்திரிகையில் ஓர் வியாசம் பிரசுரிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவேண்டுமென்று நாம் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அதைக்கொண்டு செய்யாறு தாலுகாபோர்டுத் தலைவர் தம்முடைய யோசனையைக்கவர்ன்மெண்டு அங்கீகரிக்குமாறு பிரயாசைப்படுவது உபயோகமான பலன் தரக்கூடும். அந்த ஜில்லாவில் 500 பேர்கள் ஜனத்தொகையுள்ள எல்லாக் கிராமங்களிலும், போர்டு அல்லது பஞ்சாயத்துப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறியிருப்பதைக் கவனிக்கச்சந்தோஷமாயிருக்கிறது. உயர்தர ஆரம்பக்கல்விப் பள்ளிக்கூடங்களை மாத்திரம் தாலுகாபோர்டு ஆதீனத்தில் வைத்துக்கொண்டு மற்றப்





பள்ளிக்கூடங்களைப் பஞ்சாயத்துவசமே விட உத்தேசமென்பதும் திருப்திகரமான விஷயம். அந்த ரிபோர்ட்டில் கூறப்பட்டுள்ளவாறு பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களுக்கேற்பட்டுள்ள கிராண்டுத் தொகையைத் தாலுகா போர்டுகளிடம் கவர்ன்மெண்டு கொடுப்பது உசிதமாகாது. செய்யாறு தாலுகாபோர்டைப்போல் எல்லாத் தாலுகாபோர்டுகளும் பஞ்சாயத்துகளுடன் நேசபாவமாக இல்லாமையால் இந்த அதிகாரம் பல இடங்களில் துஷ்பிரயோகிக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடும். வாசகசாலை, கிராண்டுகளை உபயோகிக்கவும் சுகாதாரவாரக் கொண்டாட்டம் நடத்தவும், அதிகப்பஞ்சாயத்துகள் முன் வந்திருக்கவேண்டும். சுத்தஜல வசதிக்காகக் குளம் குட்டைகளைச் சீர்திருத்த முந்திய வருஷத்தில் ரூ. 17,500 செலவாயிருக்கையில் இவ்வருஷம் ரூ 2,156 தான் செலவிடப்பட்டிருக்கிறதென்பது திருப்திகரமாயில்லை. தாலுகாபோர்டு இச்செலவு தொகையில் கால் பாகம் கொடுக்கச் சக்தியற்றுப்போனதே இக்குறைவிற்குக் காரணமென்று கூறப்படுகிறது. இத்தகைய கஷ்ட நெருக்கடி ஏற்பட்ட இதர இடங்களில் பஞ்சாயத்துகள் தாமாகவே பிரயாசைப்பட்டுத் தேவையான பணம் திரட்டி வேலையைப் பூர்த்தி செய்திருக்கின்றன. செய்யாறுப் பஞ்சாயத்துகளும் அவ்விதம் செய்திருந்தால் நன்றாகவிருந்திருக்கும். ரோடுகள் மராமத்திற்காகப் பணம் கிடைக்கும் விஷயமாகவும், ரோடுகளைச் செப்பனிடும் பொறுப்பு யார் யாரை எவ்வளவு சேர்ந்தது என்னும் விஷயத்தையும் நிர்ணயிப்பதில் கவர்ன்மெண்டு உடனே கவனம் செலுத்தவேண்டிய அவசியமாகிறது. சில பொதுரஸ்தாக்களை பஞ்சாயத்துவசம் விட்டிருப்பதாகக் கவர்ன்மெண்டு உத்தரவு பிறப்பித்தும் ரெவினியூ இலாகா அதன்பிரகாரம் நடக்க மறுப்பதாக இந்த ரிபோர்ட்டில் கூறப்பட்டிருப்பது ஒரு அதிசயவிஷயமாகத் தோன்றுகிறது. கவர்ன்மெண்டு இதைக் கவனிக்குமென்று நாம் நம்புகிறோம். பஞ்சாயத்துகளுக்குப் பலவழிகளிலும் உபகாரமாயிருந்துவரும் பள்ளிக்கூட சூபர்வைஸர்களின் சேவையை இந்த ரிபோர்ட்டு பாராட்டுவதைக்காணச்சந்தோஷமாயிருக்கிறது. பஞ்சாயத்துகளுக்குப் பல வழிகளிலும் உதவிபுரியத்தக்க ஸ்தாபனங்களதியவசியம். இத்தகைய ஸ்தாபனங்கள் எவ்விதமாயிருப்பினும் நலமே. கௌரவஸ்தாபகர்கள், கிராமப்புனருத்தாரண சூபர்வைஸர்கள், பள்ளிக்கூட சூபர்வைஸர்கள் அல்லது வேறெவராயினும் சரி, இவர்கள் சரியான ஆள்களாயிருப்பார்களேயாகில் பஞ்சாயத்துகளுக்கு மிகப் பிரயோஜனமான உதவிபுரியக்கூடும். செய்யாறு தாலுகாபோர்டும், அதன் தலைவர் ஸ்ரீமான் டி. எம் ஆதிகேசவலு நாயுடுவும் தங்கள் வசம் விடப்பட்டிருக்கும் பஞ்சாயத்துகளுக்கு நல்ல சேவைபுரிந்துவருவதை நாம் பாராட்டுகிறோம்.

**சுதேசி பூதக் கண்ணாடிக் கருவி.**

கிராமப் புனருத்தாரண வேலைக்கேற்ற வழியில் இலகுவாயிருப்பதுடன் மலிவாகவும் கிடைக்கக்கூடிய பூதக் கண்ணாடிக் காட்சிக் கருவி ஒன்று மதராஸ் மாகாணக் கூட்டுறவு யூனியனால் செய்யப்பட்டிருப்பதைப்பற்றி பஞ்சாயத்துக் கௌரவஸ்தாபகர்களுக்கும், பஞ்சாயத்துப் பிரஸிடெண்டுகளுக்கும், கூட்டுறவு யூனியன் காரியதரிசி எழுதியுள்ளக் கடிதத்தில் காணப்படும் விவரத்தை இப்பத்திரிகையில் வேறிடத்தில் பிரசுரித்திருப்பதை இதை வாசிப்பவர்கள் கவனிக்கவேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்ளுகிறோம். சுகாதார இன்ஸ்பெக்டர்களுக்கும், விவசாயப் பிரசாரகர்களுக்

கும், கல்வியதிகாரிகளுக்கும் பலவித ஸ்லைடுகள் சப்ளை செய்யப்பட்டு வந்தபோதிலும், அவை சாதாரணமான மாஜிக் லாண்டர்னில் உபயோகப்படுத்த முடியாததனால் சரியாகப் பிரயோஜனப்படாமலிருக்கின்றன. மாகாணக் கூட்டுறவு யூனியனால் செய்து கொடுக்கப்படும் கருவி கைவசமிருப்பின், அந்த இன்ஸ்பெக்டர்கள் தங்களிடமிருக்கும் படங்களைப் பஞ்சாயத்துகள் எல்லையில் காட்டிக் கிராமவாசிகளுக்குப் பல விஷயங்களைப் பற்றிய ஞானம் புகட்ட முடியும்.

பஞ்சாயத்தும் தாலுக் போர்டும்.

மேற்கு கோதாவரிக் கிராமப் பஞ்சாயத்துகளின் ஜில்லா மகாநாடு சென்ற மார்ச்சு மாதம் முதல் தேதி யன்று நிடதவோலில் கூடிய பொழுது, ஜில்லாப் பஞ்சாயத்துச் சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் கே. கங்காராஜுவினால் ஆஜர் செய்யப்பட்ட அச்சங்க ரிபோர்ட்டில், தாலுகா போர்டுகளும் கிராமப் பஞ்சாயத்துகளும் முறையே கிராம அபிவிருத்திக்காகச் செய்துள்ள வேலை விவரங்கள் விரிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கது. அந்த ஜில்லா பூராவும் 205 பஞ்சாயத்துகளிருக்கின்றன; ஆனால், இவற்றினால் பிரயோசனமடையும் கிராமங்கள் அந்த ஜில்லாவிலிருக்கும் கிராமங்களில் மூன்றிலொரு பாகமே அதாவது, பாக்கியுள்ள மூன்றிலிருபாகம் கிராமங்கள் தாலுகா போர்டுகளினால் கவனிக்கப்பட்டு வருகின்றன என்றேற்படுகிறது. இது 1930 31-ம் வருஷ முடிவிலெடுத்த கணக்கு. இதற்கு முந்திய வருஷங்களைக் கவனிக்குமிடத்துத் தாலுகா போர்டினால் கவனிக்கப்பட்டு வந்த கிராமங்கள் இன்னுமதிகம். இவ்விதமிருந்தும், 1927-28-முதல் 1930-31-ம் வருஷ முடிய நடந்த நான்கு ஆண்டுகளிலும் கிராம வேலைகளுக்காகத் தாலுகா போர்டுகளினால் செலவிடப்பட்ட தொகை சுமார் ரூ. 4,05,000; ஆனால் கிராமப்பஞ்சாயத்துகளினால் செலவிடப்பட்ட தொகையோ ரூ 4,59,000. தாலுக்கா போர்டுகள் செலவிடும் தொகை வரவரக் குறைந்து வருவதையும், பஞ்சாயத்துகள் செலவிடும் தொகை வர வர அதிகரித்து வருவதையும் கவனிக்கலாம் மேற்கூறிய ரூ. 4,59 000-ல் சென்ற 2 வருஷங்களில் மாத்திரம் ரூ. 3,70,000 செலவாயிருக்கிறது. 1930-31-ம் வருஷத்தில் தாலுக்கா போர்டுகளாலும், பஞ்சாயத்துகளாலும் செலவிடப்பட்ட தொகை கணக்கு முறையே ரூ. 69,946-ம், ரூ. 1,92,833-ம் ஆகும். பஞ்சாயத்தபிவிருத்தித் தாடேபள்ளிக்கூடம் தாலுகாவில் தான் விசேஷமாயிருந்திருக்கிறது. இங்கு பஞ்சாயத்துகள் கிராம நன்மைக்காகச் செலவிட்டு வந்திருக்கும் தொகைப் பிரதி வருஷமும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதன் விவரம் பின் வருமாறு :—

| | | | ரூ. |
|---|---|---|---|
| 1927—28 | ... | ... | 4,046 |
| 1928—29 | ... | ... | 12,769 |
| 1929—30 | ... | ... | 55,440 |
| 1930—31 | ... | ... | 1,33,773 |

கவர்ன்மெண்டு கிராண்டுகள் தாலுகா போர்டுகளுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் ஒரே அளவாகத்தான் கிடைக்கின்றன. சிற்சில வேலைகளுக்குக் கவர்ன்மெண்டு பாதி செலவைக் கிராண்டாகக் கொடுக்கிறது. இவ்விதமிருந்தும் பஞ்சாயத்துகள் தாலுகா போர்டுகளை விட அதிகப் பணம் செலவிட நேர்ந்திருப்பது எங்ஙனம்?





பஞ்சாயத்து வேலைகளில் உள்ளூர் ஜனங்கள் ஊக்கமும் சிரத்தையும் எடுத்துக் கொள்வதுடன், கூலியில்லாமலும், மேற்பார்வைப் பராமரிப்பில்லாமலும் ஆள்கள் வேலை செய்ய முன் வருவதுமே இதற்கு முக்கிய காரணம் பஞ்சாயத்து வேலைகளில் கண்டிராக்டர் நியமிக்கப்படுவது மிகவும் அபூர்வமாகும்; அவ்விதம் கண்டிராக்டர் மூலம் வேலை நடைபெற நேர்ந்தால், அதற்கேற்ற விசேஷ காரணம் யாதேனும் தனிப்படவிருக்கவேண்டும். ஆகையினால் கிராமாந்திர வேலைகளைச் சுலபமாகவும் சொற்பச் செலவிலும் செய்துமுடிக்கப் பஞ்சாயத்துகள் தான் ஏற்ற சாதனங்கள் என்பதில் சந்தேகமில்லை.

* * * *

ஸர் பி. ஸி. ராய்.

ஸர் பி. ஸி. ராய், நம் பேரபிமானத்திற்குற்ற தலைவர்களுள் ஒருவர். சென்ற நூற்றாண்டிற்குள் இந்நாட்டில் தோன்றிய ரஸாயன சாஸ்திரிகளுள் இவருக்கிணையான நிபுணர் எவருமில்லை இருந்தாலும், சுதேசிப்பிரசாரத்தில் இவர் அதிகக்கியாதிவாய்ந்து விளங்குகிறார். சென்ற மார்ச்சு மாதத்தில் நாகபுரி முனிஸிபாலிடி அவருக்கு அதிக ஆடம்பரங்களுடன் ஒரு உபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தது. அவர் பாமரரபிமானியாகையால் அத்தகைய உபசாரப்பத்திரம் ஒரு பஞ்சாயத்தாரால் படித்துக் கொடுக்கப்பட்டிருந்தால் அவர் அதிகச் சந்தோஷமடைந்திருப்பார். நாகபுரியில் அவருக்களிக்கப்பட்ட அப்பத்திரத்தில், அவர் ஸ்தாபித்த வங்காள பார்மகூடிகல் வொர்க்ஸ் சொற்பமாக ரூ. 300 முதல் போடப்பட்டு ஆரம்பமாகிப் பிறகு ரூ. 25 லக்ஷம் வரை முதலதிகரிக்கலாயிற்று என்றும் இப்பொழுது அதிக வியாபகமாயுள்ளப் பல சுதேசித் தொழில்கள் அவர் ஆதரவு உதவியினால் ஏற்பட்டனவென்றும், அவர் சம்பாத்தியத்தில் மீகத தொகை பூராவுமாகிய அரை லக்ஷ ரூபாய்களையும் "காதி பந்தர்" நடத்துவதற்காகக் கொடுத்துதவியிருப்பதாகவும் கூறப்பட்டது. அந்தப் பத்திரத்தில் குறிப்பிட்டிருந்த பல விஷயங்களுக்கும் பதிலளித்த பிறகு, அவர் நாகபுரிவாசிகளையும், முக்கியமாக ஸ்திரீகளையும்—ஸ்திரீகள் செல்வாக்குள்ளவர்களாகையால் தான்—கதர் விரதம் எடுத்துக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொண்டார். பகிஷ்காரம் என்றால் ராஜிய சம்பந்தப்பட்ட காரியமாகிவிடுமாகையாலும், அந்நிலைமை மாறிவிட்டால் அவசியம் போய்விடுமாதலாலும், அப்பதத்தை உபயோகிக்க அவரிஷ்டப்படவில்லை. ராஜிய நிலைமை எவ்வாறிருப்பினும் சுதேசியத்திற்கு அழிவு என்பது கிடையாதாகையால் யாவரும் சுதேசியமாக விளங்கவேண்டுமென்றார். ஜனங்கள் யாவரும் சுதேசிப் பிரதிக்ஞை எடுத்துக் கொள்வார்களேயாகில் இந்தியாவில் க்ஷீணித்துவரும் எல்லாத்தொழில்களும் புத்துயிர் பெற்று விளங்கும் என்றுகூறி, இந்திய ராஜாக்கள் சுதேசிக்கம்பளங்களை வாங்குவதைவிட்டு நாட்டிங்ஹாம் கம்பளத்தை வாங்குவதை லார்டு கர்ஜன் பரிகசித்த விஷயத்தையும் அவர் ஞாபகமூட்டினார். முடிவாக அவர் பேசியதாவது "எவனொருவன் சுதேசி சாமான் வாங்குவதற்குப்பதிலாக அன்னிய சாமானைப் பிரத்தியக்ஷமாயறிந்தும் மனப்பூர்ணமாகவும் வாங்குகிறானோ, அவன் தன் தாய்நாட்டிற்கு மகத்தான துரோகம் செய்தவனாகிறான்".

# இந்திய சாமான் பிரசார சங்கம்.

ஸ்ரீமான் B. சிவராவ், எம். எ., எழுதியது.

சென்னையில் ஜனங்கள் இந்திய சாமான்களையே வாங்கவேண்டுமென்று பிரசாரம் செய்வதற்கான வேலைத்திட்டங்களுடன் ஆறு வாரங்களுக்குமுன் இந்திய சாமான் பிரசார சங்கம் ஒன்றை ஸ்தாபிக்கலானோம். தேச நிலைமைச் சாதாரணமாக இல்லாத இச்சமயத்தில் இச்சங்கவேலை எம்மட்டில் அபிவிருத்தியடையப் போகிறதென்ற சந்தேகமும் கவலையும் அநேகருக்கேற்பட்டிருந்தது. இருந்தாலும் பரீக்ஷார்த்தமாக வேலை தொடங்கப்பட்டது. அதன் பலன் எதிர்பார்த்த அளவிற்குமேல் திருப்திகரமாயிருந்து வருகிறது. தற்சமயம் ஜில்லாவிற்கு ஒன்றுக்குக் குறையாமல், சில ஜில்லாக்களில் ஒன்றுக்கதிகமாகவும், இச்சங்கத்தின் கிளைகள் ஏற்பட்டிருக்கின்றன. மேற்குக் கோதாவரி ஜில்லாவில் இந்திய சாமான் பிரசார ஜில்லா மகாநாடொன்றுகூட நடைபெற்றுவிட்டது; அதே மாதிரியாக ஆந்திர மாகாண மகாநாடு ஒன்றும் நடத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. ஜில்லா போர்டுகள், முனிஸிபாலிடிகள், தாலுகா போர்டுகள் முதலியனவும் சுதேசியத்தை ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியிருப்பதுடன், தங்கள் தேவைக்கேற்ற சாமான்களை வாங்குவதற்கு இந்திய சாமான் பிரசார சபையின் உதவியையும் கோரியிருக்கின்றன. பெரிய பட்டிணங்களில் சுதேசி ஸ்டோர்கள் ஏற்பட்டு வருகின்றன; இன்னும் ஆறு ஸ்டோர்கள் ஏற்படுவதற்கானப் பிரயாசைகளும் செய்யப்பட்டு வருகின்றன. சென்னை நகரிலிருக்கும் மாணாக்கர்கள் சேர்ந்து தங்கள் தேவைக்கேற்ற சாமான்கள் கிடைக்கக்கூடிய ஸ்டோர் ஒன்று ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிறார்கள்; பள்ளிக்கூடங்கள் திறந்தபிறகு பள்ளிக்கூட அதிகாரிகள் இந்த ஸ்டோரிலேயே தங்களுக்கவசியமாகும் சாமான்களை வாங்குவதாக வாக்களித்திருக்கிறார்கள்.

இதைக்கொண்டு நம் முயற்சித் திருப்திகரமான பலன் தருகிறதென்று நான் கூறுவேன். அற்ப சொற்ப அதிகாரம் வகிப்பவர்கள் நமக்கு எவ்விதச் சில்லரைத் தொல்லை விளைவித்தபோதிலும் அவற்றினால் சளைப்புறாது, நம் சங்கம் ஒரே நோக்கமாக மேல் நடக்கவேண்டிய வேலையிலேயே கவனம் செலுத்தி வருகிறது. தென்னிந்தியாவில் நடைபெறும் விசேஷ உற்சவங்களும் சந்தைகளும் இச்சங்க வேலைக்கனுகூலமாகவிருக்கின்றன. பிரதி வருஷமும் லக்ஷக்கணக்கான பக்த கோடிகள் விஜயம் செய்யும் கருடோற்சவ காலத்தில் காஞ்சீபுரத்தில் இந்திய சாமான்கள் காட்சி யொன்று நடைபெறும். இதே வருஷத்தில் ராஜமஹேந்திரபுரத்தில் புஷ்கரம் என்னும் மகோற்சவம் ஒன்று நடைபெறப் போகிறது. இந்த உற்சவத்திற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் கணக்கற்ற ஜனங்கள் வருவார்கள். அச்சமயத்தில் அங்கும் ஓர் சுதேசிப் பொருட்காட்சி நடைபெறும். இவ்விதமாக நம் நாட்டில் நடைபெறும் எல்லா உற்சவ சமயங்களிலும் ஆங்காங்கு ஒரு சுதேசிக் காட்சி நடத்துவது ஒரு அம்சமாகிவிட்டால், உற்சவத்திற்கு வரும் ஒவ்வொருவரும் சுதேசிக் காட்சியைப் பார்க்கலாமென்னும் அவாவுடனிருப்பார்கள்.





சுதேசி இயக்கம் இந்நாட்டில் புதிய சமாசாரமில்லை. இருந்தபோதிலும், சாசுவதமான வழியில் இவ்வேலை நடத்தப்படாதது வருந்தக்கூடிய விஷயமே. நாட்டில் ராஜீய நெருக்கடி ஏற்பட்டு தேசிய உணர்ச்சி வலுவுறும்பொழுதெல்லாம் சுதேசி இயக்கம் அதிக மும்முரமாக நடைபெறுகிறது. அந்த ராஜீயக் கிளர்ச்சியடங்கிவிட்டால் இந்த இயக்கமும் படுத்துவிடுகிறது. ராஜீய சம்பந்தமில்லா வழியில், ஆவேசமேற்படாமல், என்றும் ஒரேவித அபிமானத்துடன் சுதேசி இயக்கம் ஸ்திரப்பட்டு வருவதற்கான முயற்சிகள் இதுவரை செய்யப்பட்டதில்லை. முந்திய அனுபவங்களைக்கொண்டு, பிரயோசனமான வழியில் வேலை செய்யும் நோக்கத்துடன் இந்திய சாமான் பிரசாரச் சங்கம் ஏற்பட்டிருக்கிறபடியால், இதுகாறுமிருந்ததைவிட இவ்வியக்கம் பிரபலமாகவும் சாசுவதமாகவும் நீடிக்கக்கூடும். தவிரவும், புராதன முறையில் சாமான்களைச் செய்து விற்பதான லாபமற்ற வழக்கத்தைக் களைந்து நம் சமூகப் பொருளாதாரக்கொள்கையையே சீர்ப்படுத்தவேண்டுமென்பதும் இந்தச் சங்கத்தின் நோக்கமாகும். விளம்பரம் பிரசாரம் செய்வதனால் கிடைக்கக்கூடிய லாபம் முதலிய சௌகரியங்களை இந்தியாவில் பண்டம் தயாரிப்பவர்கள் சரியாக இன்னும் உணரவில்லை. இந்நாட்டில் பண்ட சிருஷ்டியிலீடுபடுபவர்கள் தங்கள் தொழில் வியாபகமாவதற்கேற்றவாறு, தற்கால முறையில் விளம்பரம் செய்ய முற்படவேண்டுமென்பதே இந்திய சாமான் பிரசார சங்கத்தின் முக்கிய கொள்கையாகும். இதைச் செய்துவிடின் இச்சங்கம் விசேஷ காரியத்தைச் சாதித்ததாகும்.

இத்தகையச் சங்கம் என்ன காரியம் செய்யக்கூடுமென்பதைச் சென்ற வருஷம் நான் இங்கிலாந்திலிருந்தபொழுது பிரதி தினமும் கவனிக்க நேர்ந்தது. “பிரிட்டிஷ் சாமான் பிரசார சபை” அங்கு செய்துவரும் வேலையின் பலனாக அந்நாட்டில் செல்பவர் எவரும் அதன் வலையிலிருந்து தப்பமுடியாமலிருக்கிறது. அந்த ஊரில் கவர்ன்மெண்டுள்பட, ராஜகுடும்பத்தினர்கள் யாவரும் அந்த இயக்கத்தில் சேர்ந்து அதன் வேலைகளைத் தங்கள் சொந்தக் காரியம்போல் நடத்தி வருகிறார்களென்பதும் ஒரு முக்கிய விஷயமென்பதில் சந்தேகமில்லை. கடைகளில் ஜன்னல்கள் மீதும், ரயில் வண்டிகளிலும், டிராம் வண்டிகளிலும், பஸ்களிலும், தெரு முனைகளிலும் எங்கு பார்த்தாலும் ஒட்டப்பட்டுள்ள அட்டைகள் விளம்பரங்களைக் கவனிக்குந்தோறும் அவ்வூரில் வேலையில்லாக் கஷ்டத்தை நீக்க இந்த இயக்கம் நடைபெறுவதாகத் தோன்றும். இத்தகையப் பிரசாரத்தின்பலனாக பிரிட்டிஷ் தொழில்கள் செழிப்புற்று விருத்தியடைந்து வருவதை எவரும் கவனித்துக்கொள்ளலாம்.

பிரிட்டனில் இவ்வளவு தூரம் சாத்தியமாயிருக்கையில் இந்தியாவில் ஏன் அதிகம் செய்யமுடியாது? பிரிட்டனோ அன்னியர்களிடம் தான் தம் சாமான்களை விற்கவேண்டியிருக்கிறது. இந்தியாவோ அவ்விதம் பிறரை நம்பியிருக்கவேண்டிய அவசியமேயில்லை. நம் வேலை ஒரு வழியில் மிகவும் சுலபமானதென்றே சொல்லலாம்; ஏனென்றால், நம் ஜனங்களை இந்திய சாமான்களை வாங்குமாறு கிளப்பிவிட்டால் போதுமானது. ஆனால் சிலருக்கு இவ்விஷயமாக ஏற்பட்டிருக்கும் சந்தேகம் உறக்கமிவற்றை நீக்குவது சற்று பிரயாசையான காரியமாகும். நாட்டில் தொழிலபிவிருத்தி ஏற்பட்டால்தான் தேசத்தின் செல்வமுமதிகரிக்குமென்னும் விஷயத்

ந்தைப் பாமரர்களுணருமாறு செய்வதற்கு விசேஷ முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமுமிருக்கிறது.

இவ்வாறிருப்பினும், நம் காரியம் கைகூடி இயக்கம் வேரூன்றி வருகிறது. இதுவரையில் ஏற்பட்டுள்ள பலன்களைக்கொண்டே இச்சங்கம் உற்சாகமுறக்கூடும். நம் நாட்டின் ராஜிய நிலைமை எவ்வாறு ஏறத்தாழ்வாயிருந்தபோதிலும், சங்கம் நோக்கப் பிரகாரம் வேலையை நடத்திக்கொண்டே போகவேண்டியதவசியமாகிறது. நம் சர்க்கார் அனுஷ்டித்து வரும் ஆட்சி முறையைக் கண்டிக்கவென்று இச்சங்கமேற்படவில்லை; நாட்டில் ஏற்பட்டுள்ள ராஜிய அதிருப்தியை உணர்த்துவதற்காகவென்றும் இது தோன்றவில்லை. ஜனங்களிடையே தற்சமயம் தோன்றியுள்ள உணர்ச்சியைக் காரணமாகக்கொண்டு இது ஏற்பட்டுள்ளது உண்மையே; எனினும், இச்சமயத்தில் இச்சங்கத்திற்கேற்பட்டுள்ள ஆதரவு, நிலைமை அமைதியான பிறகும் நீடித்து ஒரே சீராக வேலை செய்வதற்கான வழியில் வசீகரமான திட்டங்களை அனுஷ்டிக்கவேண்டியது அவசியமாகிறது. அதிகார வர்க்கத்தின் கீழிருப்பதை விட சுயராஜ்யம் ஏற்பட்டதும் இச்சங்கம் அதிக உபயோகமாயிருக்கும். ஏனென்றால், அப்பொழுது சுயராஜ்யத்தினால் சம்பவிக்கக்கூடிய நன்மைகள் யாவையென்பனவற்றை ஜனங்கள் பிரத்தியக்ஷமா யுணரவேண்டுமானால், தற்சமயம் காணப்படும் சுகாதாரம் கல்விக்குறைகளை நிவர்த்தித்து கல்வி முதலியவற்றை வியாபிக்கச் செய்ய வேண்டுவது முதல் கடமையாகும்.

இந்தியாவில் தொழிலாளரியக்கத்தில் எனக்கிருக்கும் சம்பந்தத்தினால் கவர்ன்மெண்டு எவ்வகைப்பொறுப்பு வகிப்பதென்பதை நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு. சட்டம் அமைதியை நிலைநிறுத்துவதுடனில்லாது, தேசிப் புனருத்தாரண வேலைகளை நடத்திவைப்பதும் கவர்ன்மெண்டின் கடமைகளில் ஒன்றாகும் என்பது என் அபிப்பிராயம். இந்த அபிப்பிராய மேலீட்டினால் "நமக்குப் பூர்ண சுயராஜ்யம் கிடைத்துவிட்டால், இந்தியர் ஒவ்வொருவருடைய வருஷ வருமானமும் ரூ 70 அல்லது ரூ. 80 ஆகவிருக்கையில், சுயராஜ்ய கவர்ன்மெண்டினால் என்னதான் செய்ய முடியும்?" என்று நான் என்னையே கேட்டுக்கொள்வது வழக்கம். இரண்டு நூறாண்டுகளுக்கதிகமாக அன்னிய ஆட்சியின்கீழிருந்து நம் நாட்டுத் தொழில்கள் யாவும் கைவிடப்பட்டபிறகு நமக்குச் சுயராஜ்யம் கிடைத்தால், நோயாளி பிணிநீங்கி குணமடைந்துவரும் காலத்திற்கது ஒப்பாகுமென்பதை நம் ஜனங்களதிகமாக எண்ணுவதில்லை. சுயராஜ்யத்தின் சத்தாகிய நல்ல ஆட்சியென்பது நாளடைவில் தான் ஏற்படக்கூடும். நம் ஜனங்களுடைய வறுமை நீங்கி, தேசிய வேலைத்திட்டத்தை நடத்திவைப்பதற்கான வருமானம் நம் தேச மக்களுக்கேற்பட்ட பிறகே ஜனங்களுடைய முன்னேற்றத்திற்கான வழியில் நிர்வாகம் நடத்தமுடியும். அத்தகையத் தேச க்ஷேமத்திற்கு தவறாத வழிகாட்டுவது இந்த இந்திய சாமான் பிரசாரச்சங்கம்.

---



## பூதக்கண்ணாடிக் காட்சிக் கருவிகள்.

### முனிஸிபல் சபை, லோகல் போர்டுகள் இன்ஸ்பெக்டர் ஆபீஸ், மதராஸ்.

மதராஸ் ராயப்பேட்டையிலிருக்கும் மாகாணக்கூட்டுறவு யூனியன் கௌரவக் காரியதரிசி எழுதிய 1932-ம்வருஷம் பிப்ரவரிமாதம் 11-ம்தேதியிட்டிருக்கிய R C 17/31-32 நம்பர் கடிதம் கவனிக்கப்பட்டது.

பைசல் L. Dis. 5556-32/23-2-1932.

வடஆற்காடு, தென்னாற்காடு, திருச்சினாப்பள்ளி, மதுரை, கடப்பை, கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி, பெல்லாரி முதலிய ஜில்லா போர்டு தலைவர்களுக்கும், செய்யாறு, புத்தூர், தாடே பள்ளிக்கூடம் முதலிய தாலுகாபோர்டு தலைவர்களுக்கும், பாபட்லா, நாமக்கல், நாட்ராம்பள்ளி, பெல்லாரி, திருத்தாங்கல் முதலிய இடத்துப் பிரதம கௌரவஸ்தாபகர்களுக்கும் இது தெரிவிக்கப்படுகிறது.

2. இவர்கள் இக்கருவிகள் ஒன்று அல்லது அதிகமாக வாங்கிக்கொள்ளுமாறு யோசனை கூறப்படுகிறது.

(ஒப்பம்) கே. மல்லிகார்ஜுனன்,
பெர்ஸனல் அஸிஸ்டெண்டு.

(உத்தரவுப்படியாக)

எஸ். ராமச்சந்திரன்,
மானேஜர் 27-2-1932.

---

முனிஸிபல் சபை, லோகல் போர்டுகள் இன்ஸ்பெக்டருக்கு மதராஸ் ராயப்பேட்டையிலிருக்கும் மாகாணக் கூட்டுறவு யூனியன் கௌரவக் காரியதரிசி 11-2-32-ல் எழுதியுள்ள கடிதத்தின் (R. C. 17/31-32) விவரம் பின் வருமாறு:—

இம் மாகாணத்திலுள்ள பஞ்சாயத்துகள், முனிஸிபாலிடிகள், ஸ்தல ஸ்தாபனங்களுக்கு மதராஸ் மாகாணக் கூட்டுறவு யூனியன் கௌரவக் காரியதரிசி ஸ்ரீமான் வேங்கடசுப்பையா 1931-ம் வருஷம் மார்ச்சுமாதம் 29-ம்தேதியன்று எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:—

உங்கள் வேலைக்கு அதி உபயோகமாயிருப்பதற்கேற்ற பூதக்கண்ணாடிக் காட்சிக் கருவிகள் மதராஸ் மாகாணக் கூட்டுறவு யூனியனால் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த யூனியன் நடத்திவரும் கிராமப்புனருத்தாரண வேலைக்காக இவை தயாராயின. இவை மிகவும் உபயோகமாயிருக்கின்றன. ஆகையினால்தான் பூதக்கண்ணாடிக் காட்சி மூலம் கல்விஞானப் பயிற்சியளிக்க விரும்பும் யாவரும் இவற்றின் பிரயோஜனத்தை யறிந்துகொள்ளுமாறு அதை விளம்பரப்படுத்த உத்தேசித்து இதை எழுதலானேன்.

இந்தக் கருவி மிகவும் சுலபமானது, எவரும் உபயோகப்படுத்தலாம். மிகவும் இலேசாக விருக்கின்றமையால் அக்கையில் எடுத்துக்கொண்டே செல்லக் கூடும். கார்பைட், மின்சார முதலியவை இதற்குத் தேவையில்லை. பெட்ரோமாக்ஸ் வெளிச்சமே போதுமானது. பின் வரும் காரணங்களைக்கொண்டு இதர மாஜிக் லாண்டர்ன்களை விட இக்கருவி மிகவும் திறமையானதென்று கூறலாம். இதனால் ஏற்படும் சௌகரியங்களாவன:—

(1) மிகவும் மலிவானது. ஆகையினால் சிறு கூட்டுறவுச் சங்கங்கள் கூட இவற்றை வாங்கிக்கொள்ளலாம். இதன் கிரயம் ரூ. 45 தான். பெட்ரோமாக்ஸ் லாந்தர் தனியாகத்தான் வாங்கிக்கொள்ளவேண்டும். இதர மாஜிக் லாண்டர்ன்களை வாங்குவதாயிருந்தால் ரூ 109 முதல் 300 வரைச் செலவிடவேண்டும்.

(2) இது சுதேசி சாமான். சென்னையிலுள்ள வேலைக்காரர்களைக் கொண்டு தான் செய்யப்படுகிறது.

(3) இதர லாந்தர்களைப்போல் சூடு அதிகம்ஏறி கண்டென்ஸர் வெடித்துப் போகுமென்ற பயம் இதில் கிடையாது. இது அதிக உஷ்ணமாவதில்லை.

(4) தீபவெளிச்சம் ஆடாமல் ஒரே சீராக எரிகிறது. கார்பைட் விளக்குகளோ அடிக்கடித் தொல்லை விளைவிப்பதுடன் திடீரெனப் பாதியில் அணைந்து போய்விடுகிறது.

(5) இதற்கேற்படும் செலவும் மிகவும் சொற்பமே. பெட்ரோமாக்ஸ் விளக்கில் அரைபுட்டி கெரோஸின் எண்ணெய்விட்டால் மூன்று அல்லது நான்கு மணி நேரங்கள் எரியும். ஒருமணிநேரம் பிரசங்கம் செய்ய அரை அணாவிற்குமேல் செலவாகாது. கார்பைட் உபயோகிப்பதாயிருந்தால அதே நேரத்திற்கு 8 அணாவரையில் வேண்டியிருக்கும்.

(6) இதற்குபயோகிக்கப்படும் பெட்ரோ மாக்ஸ் லாந்தர் பூதக்கண்ணாடிக் காட்சிக்குமாத்திர மில்லாமல் இதர காரியங்களுக்கும் உபயோகமாயிருக்கும். கிராமங்களில் சாதாரணமாகப் பெட்ரோ மாக்ஸ் வெளிச்சமில்லாமல் கூட்டங்கள் நடத்துவது சாத்யமாகாது. அந்த விளக்கைப் படக்காட்சிக்கும் உபயோகித்துக் கொள்ளலாம். கார்பைட் விளக்கோவெனில் மாஜிக் லாண்டர்ன்தவிர வேறெந்த காரியத்திற் குபயோகப்படமாட்டாது.

மாகாணக் கூட்டுறவு யூனியன் லாபத்திற்குப் பாடுபடும் ஸ்தாபனமில்லை. பொதுஜன சேவையே இதன் நோக்கம். ஆகையினால், இந்தக் கருவியைச் செய்து விற்பதில் லாபம் தேடும் உத்தேசம் கிடையாது. இக்கருவிகள் எப்பொழுதும் கைவசம் தயாராயில்லை. இருந்தாலும் பொதுஜன வேலைக்காக எவர் விரும்பினாலும் அவர்களுக்காக இவற்றைச் செய்துகொடுக்கத் தயாராயிருக்கிறோம்.

தவிரவும், யூனியன், காட்சிக்கேற்ற கண்ணாடிப் படங்கள் மூன்று விதமாகத் தயாரித்து வைத்திருக்கிறது இவற்றில் ஒருவகை நாட்டுப்புறக் கதைகளையும் மற்றொருவகை நகர வாழ்க்கையைப்பற்றிய கதைகளையும் விளக்குகின்றன மூன்றாவது வகை, கிழக்கு கோதாவரி ஜில்லாவில் அலமூரு என்னுமிடத்தில் இந்த யூனி





யன் ஆதரவில் நடத்தப்பட்டுவரும் கிராமப் புனருத்தாரண வேலை சம்பந்தப்பட்ட படங்கள். இவற்றில் 22 படங்கள் அலமூருக் கூட்டுறவுச் சங்கங்கள் செய்யும் வேலையைக் காட்டுகின்றன. இச்சங்கங்களால் யார் யாருக்கு எவ்வித உபயோக மேற்படுகிறதென்பதும் தெரிவிக்கப்படுகின்றன. மேலும் 23 ஸ்லைடுகள் மூலம் அலமூருப் பஞ்சாயத்தால் நடத்தப்பட்டுவரும் பலவித வேலைகளும் காட்டப்படுகின்றன. மற்றும் 17 ஸ்லைடுகள், தேகப்பயிற்சி, குடியின் தீமைகள், மத்தியஸ்த வேலை முதலியவற்றை விளக்குகின்றன. இந்தப்படங்கள் யாவும் கூட்டுறவுப் பிரசாரத்திற்கு மிகவும் உபயோகமா யிருக்குமென்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## நமது பூதக்கண்ணாடித் தீபத்தைப்பற்றி லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் எழுதியுள்ள அபிப்பிராயம்.

இந்த பூதக்கண்ணாடித் தீபம் வேலையை நான் கவனித்தேன். இதுவும் கிராமப் புனருத்தாரணப் படங்களடங்கிய ஸ்லைடுகளும், பஞ்சாயத்தாரிடையே பிரசாரம் நடத்துபவர்களுக்கும், பஞ்சாயத்தேற்படுத்த முயலுவோருக்கும் இவை அவசியமும் உபயோகமுமான சாதனங்கள் என்றபிப்பிராயப்படுகிறேன். இத் தீபத்தையும், ஸ்லைடுகளையும் பின்வருமேல் வாங்கலாமென்பது என்யோஜனையாகும்.

(1) ஜில்லாப் பஞ்சாயத்து ஸ்தாபகர்களும் ஜில்லா சுகாதார அதிகாரியும் உபயோகிப்பதற்காக ஜில்லா போர்டுகளும்.

(2) கௌரவ ஸ்தாபகர்கள். பிரதம கௌரவஸ்தாபகர்கள் உபயோகிப்பதற்காகத் தாலுகாபோர்டுகளும், பஞ்சாயத்துச் சங்கங்களும்.

(3) வயது வந்தவர் கல்வி கற்கவும், தமாஷாவிற்குமாகப் பஞ்சாயத்துகள் நிர்வகித்துவரும் வாசகசாலைகளிலும் புஸ்தகசாலைகளிலும் வைக்கக்கூடுமான பஞ்சாயத்துகளும்.

இவற்றை வாங்கிவைக்கலாம்.

இப் பூதக்கண்ணாடித்தீபம் மலிவாகயிருக்கிறது. காட்சி நடத்த ஏற்படும் செலவும் சொற்பமே. இவற்றின் அமைப்பு சர்வ சாதாரணமா யிருக்கின்றமையால் எந்தக்கிராமத்திலும் இவற்றைப் பிரயாசையதிகமில்லாமல் உபயோகிக்கத் தக்கவர் கிடைக்கக்கூடும். இங்கு தயாரிக்கப்படும் படங்களும் கடைகளில் கிடைப்பனவற்றைப்போல் நல்லதாகவிருப்பது மல்லாது, கிரயமும் நான்கு அல்லது 5 மடங்குக் கடைவிலைக்குக் குறைவாகவுமிருக்கிறது.

(ஒப்பம்) எஸ். கோபாலசாமி,
இன்ஸ்பெக்டர்.

# பொது விளம்பரம்.

தாலூகா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள். பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து; கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிரூபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவுமிருத்தல்வேண்டும். கொஞ்சமிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு ஏதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிரூபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிரூபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.

கேரள சந்தனச் சோப்பை
வாங்குங்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் வீட்டிலும் சுகத்தையும்
ஆனந்தத்தையும் அளிக்கும் சோப்பு இதுவே.

மிகவும் சிறந்த நறுமணம் பொருந்தியது

கோடையில் மிருந்த குளிர்ச்சியையும், பரிமளத்தையும்
கொடுக்கும்
வெகு சிறந்த சோப்பும் இதுவே.

கேரளச் சோப்பு இன்ஸ்டிடியூட்,
கள்ளிக்கோட்டை.

இராஜவழி

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும்
காலத்தில் உங்கள் கஷ்டங்களை நீக்கி ஆரோக்கிய
ஐஸ்வரிய மென்னும் இராஜவழியில் நிறுத்துவது

எங்கள் காம சாஸ்திரம்

ஆரோக்கியம், ஐஸ்வரியம் சுக செளக்கியம் இவை
களை காட்டும் அரிய நூல் கேட்போருக்கு இனா
மாகவும் தபால் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, சென்னை.



பத்திராதிபர்.—கனம். ஜி. ஹரிஸர்வோத்தமராவ்-எம்.ஏ.
அச்சிடுவோர்.—மத்தியக் கூட்டுறவு அச்சு இயந்திரசாலை,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.



இதழ் II. நெ. 8

ரிஜிஸ்தர் நெ. M. 2623.


# 'இராமப் பஞ்சாயத்து.'

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

மே 1932


பிரசுரஞ் செய்வோர்.

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை.

## அடக்கம்.

பக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | புராதன இந்தியாவில் ஸ்தல ஸ்தாபன ஆட்சி ... | 135 |
| 2. | பத்திராதிபரின் குறிப்புகள் ... ... ... | 140 |
| 3. | பஞ்சாயத்துகளின் வரி விதிக்குமதிகாரம் ... ... | 143 |
| 4. | சென்னை மாகாண ஸ்தல ஸ்தாபன சங்கம் ... ... | 147 |
| 5. | பஞ்சாயத்துகளின் உபயோகமும், கடமைகளும் ... | 149 |
| 6. | விவசாயம்—அபிவிருத்திக்கு சில சாதனங்கள் ... ... | 155 |
| 7. | இந்திய சாமான்களை ஏன் வாங்கவேண்டும்? ... ... | 157 |


---

### சந்தா விவரம்.

பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு ரூபாய் 2.

மற்றவர்களுக்கு ... ,, 3.

தனிப்பிரதி ... அணா 4.

### விளம்பர விகிதம்.

பத்திரிகை மானேஜருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்,

**சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,**

ராயப்பேட்டை, சென்னை

# கிராமப் பஞ்சாயத்து.


மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் II] 1932ஆ மேமீ [இலக்கம் 8.


## புராதன இந்தியாவில் ஸ்தல ஸ்தாபன ஆட்சி.

லார்டு ரிப்பன் காலத்திலிருந்து தான் இந்தியாவில் முனிஸிபல் ஸ்தல ஸ்தாபன ஆட்சி ஏற்பட்டு அவற்றினாலடையக் கூடிய நன்மைகள் தோன்றலாயினவென்று யாரேனும் எண்ணுவார்களாயின் அது தப்பான அபிப்பிராயமாகும். இந்தியாவில் புராதன காலத்தில் ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் நடைபெற்றத் திறமையைக் கவனித்தால், மேல் நாடுகளில் தற்சமயம் மிகவும் சிறப்பானதென்று கொண்டாடப்படும் ஊர்கள் கூட அவற்றிற்கிணையாகமாட்டா. சென்ற ஏப்ரல்மீ 16உ வெளிவந்த கல்கத்தா முனிஸிபல் கெஜட்டில் இவ்விஷயமாக ஸ்ரீமான் பாபேஷ்ஹாக் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். மெகாஸ்தனிஸ் பாதலிபுத்திரம் என்னும் ஊரைப்பற்றியும், 1840-ம் வருஷத்தில் ஒரு பிரஞ்சு ஆசிரியர் இந்தியக் கிராமங்களைப்பற்றியும் எழுதியுள்ளவற்றையே இவர் முக்கிய ஆதாரமாகக்கொண்டு எழுதியுளார். அந்த வியாசத்தின் சாராம்சத்தை இங்கு சுருக்கமாக எடுத்துக் கூறுவது ஒரு அனுவசிய காரியமாகாது.

பாதலிபுத்திரம் என்னும் நகரைப்பற்றி மெகாஸ்தனிஸ் எழுதியிருப்பது அக்காலமிருந்த இதர நகரங்களுக்கும் பொருந்துவதாகக்கொள்ளலாம். அப்பொழுதிருந்த முனிஸிபல் சபையில் 30 மெம்பர்களிருந்தார்களென்றும், அவர்கள் அவ்வைந்துபேர்களாகக்கொண்ட கமிட்டிகள் 6 இருந்தனவென்றும் அவர் கூறி, அக்கமிட்டிகளின் அலுவல்களைப்பற்றியும் தெரிவிப்பதாவது :—(1) ஒரு கமிட்டி கைத்தொழில் சித்திர சிற்பங்களைக் கவனிக்கும், (2) வெளியூர்களிலிருந்து வருபவர்களை வரவேற்று உபசரிக்க ஓர் கமிட்டி, (3) ஜனன மரணக் கணக்கெழுதி வைக்கும் கமிட்டியொன்று, (4) வர்த்தகம், வியாபாரங்களை மேற்பார்வையிட ஓர் கமிட்டி, (5) சாமான்

கள் தயாரிப்பதை மேற்பார்வையிடுவதற்காக ஓர் கமிட்டி, (6) தயாரிக்கப்பட்ட பண்டங்கள் விற்பனையானதும், அவற்றினால் கிடைக்கும் வருமானத்தில் 10-ல் ஒரு பாகம் வசூலிக்க ஓர் கமிட்டி, ஆக மொத்தம் கமிட்டி 6. இக்கமிட்டிகள் யாவும் சேர்ந்து பொதுவாக ஊரிலிருக்கும் பொதுக் கட்டிடங்கள், துறைமுகங்கள், கோயில்கள் முதலியவற்றை சம்ரக்ஷணை செய்தும், மார்க்கெட்டுகளைக் கவனித்து விலை வாசிகளை நிதானித்து நிர்ணயிக்கும் பொறுப்பை வகித்தும் வந்தன. தர்மவிக்கிரயங்கள், வீடுகள், ஆலைகளை விற்பது முதலியவற்றையும் முனிஸிபாலிடிகள் கவனித்துக்கொண்டிருந்தன. தொத்துநோய், கொள்ளைநோய் பரவமுடியாமல் உடனுக்குடனே கவனம் செலுத்தவேண்டியது பெரிய நிர்ப்பந்தமாகும். இந்த வியாதிகளைப் பற்றி முன்னதாக எச்சரிக்கை செய்து குணப்படுத்தத் தாமதமேற்பட்டால் இவ்வேலைப் பொறுப்பு வகிக்கும் வைத்தியர்கள் அபராதம் விதிக்கப்பட்டோ அல்லது சிறையிலடைக்கப்பட்டோ தண்டிக்கப்படுவாராம். அக்காலத்தில் இப்பொழுது ஏற்படுவதை விட தீப்பற்றுவது அதிகமாயிருந்தது போலும்; ஏனெனில், ஒவ்வோர் பொதுக்கட்டிடத்திலும் ஆயிரக் கணக்கான பாத்திரங்களில் தண்ணீர் எப்பொழுதும் தயாராக வைக்கப்படுவது வழக்கம்.

° °

பட்டிண அமைப்பு அபிவிருத்தி செய்வதில், ஊர்வாசிகளின் தேக சௌக்கியத்தையே நகர சபைப் பிரதிநிதிகள் தங்கள் முக்கிய கருத்தாகக் கொண்டிருந்தனர். கக்கூஸ், ஜன்னல், சாக்கடை, கிணறுமுதலியன இல்லாமல் வீடே கட்டக்கூடாது. ஒரு வீட்டிற்கும் அடுத்த வீட்டிற்கு மிடையே திறந்த வெளியாகக் காலியிடம் விட்டு வைக்கவேண்டும். ரோடு விசாலமாயிருந்தாலல்லது எதிர்சாரிகளின் வீடுகள், வாசற் கதவுகளோ, ஜன்னல்களோ நேருக்கு நேராகவிருக்கக்கூடாது. ஒரு வீட்டு ஜலதாரை அண்டை வீட்டு வழியாக ஓடவிடக்கூடாது; அடுத்த வீட்டு ஜலம் ஓட விடப்படும் ஜலதாரையை அடைத்து இடைஞ்சல் விளைவிக்கவும் கூடாது. ரோட்டில் குப்பை கூளங்களைப் போடக்கூடாது; நாலுபேர் நடமாடுமிடங்களிலோ, உற்சவம் நடக்கும் க்ஷேத்திரங்களிலோ, ஜலம் தேங்கியிருக்குமிடங்களுக்கருகிலோ அசுத்த ஆபாசங்கள் செய்பக்கூடாது. ஏற்கனவே குறிப்பிடப்பட்ட பாதை தவிர வேறு மார்க்கங்களில் பிணம் தூக்கிச் செல்லக்கூடாது, விதிக்கப்பட்ட சில குளங்கள் தவிர வேறெக்குளங்களிலும் துணிகள் கசக்கித் தோய்த்தல் கூடாது என்று வற்புறுத்தப்பட்டு வந்தது.





ஒவ்வொரு பட்டிணமும் பல ஜில்லா அல்லது தேசங்களாகவும், ஒவ்வொரு தேசமும் பல பேட்டைகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. நகரத்தின் பிரதம நிர்வாக அதிகாரிக்கு **நாகரீகா அல்லது பூரமுக்கியா** என்று பெயர் வழங்கிவந்தது. இவருடைய உதவி அதிகாரிகளுக்கு **ஸ்தானிகர்** என்றும் பெயர் வழங்கிவந்தது. பேட்டைக்கு அதிகாரிக்கு **கோபா** என்று பெயர். தானியம், எண்ணெய், உப்பு, பரிமள வாசனைத் திரவியங்கள், மருந்துகள் முதலியவை கலப்பிடமில்லாமல் விற்பதற்கான ஏற்பாடுகள் திறமையாக விருந்தன. இவ்வழியில் குற்றம் செய்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டு வந்தனர். இவற்றினின்றும், புராதன இந்தியாவில் முனிஸிபல் நிர்வாகம் பல துறையிலும் திறமையாகவும், செம்மையாகவும் நடைபெற்று வந்திருப்பது விளங்கும்.

பட்டிண நிர்வாக மிவ்வாறுயிருக்க, கிராமங்கள் நிர்வகிக்கப்பட்டதைக் கவனித்தால் ஜனநாயக ஆட்சிமுறை ஒழுங்காக நடைபெற்று வந்திருப்பது விளங்கும். கிராமங்களுக்குத் தேவையான வசதிகள் சுலபமாகக் கிடைக்கவும், ஜனங்கள் சந்தோஷமாக வாழவும், கவர்ன்மெண்டிற்கும் பட்டணங்களுக்கும் உள்ள சம்பந்தங்கள் பரஸ்பர ஒற்றுமையாகவும் நடைபெறுவதற்கேற்ற வழியில் உபவிதிகள் எளியனவாகவும் இலகுவாகவும் தயாரிக்கப்பட்டிருந்தன ஹிந்துக்கிராமங்கள் வீடுகள் அடர்ந்த தோர் ஸ்தலமென்ற பேச்சுக்கிடமில்லாமலிருந்தன.

கிராம நிர்வாகம், கிராமாதிகாரி, கிராமலேகாகர், என்னும் இரு அதிகாரிகளால் நடத்தப்பட்டு வந்தன. கிராமங்களில் ஜனங்களுக்கேற்படும் சச்சரவைத் தீர்த்துவைத்து சுகாதார விதிகளை வற்புறுத்தி வருவதுமே கிராமாதிகாரியின் பொறுப்பாகும். வரி விதிக்கும் விஷயமாகப் போதிய உதவி புரிவதும் இவருடைய கடமையாகும். கிராமங்களில் நடைபெறும் விஷயங்களைப் பற்றிய குறிப்புகள் சரிவரப் பதிவுசெய்து வைத்துக்கொள்வதே கிராம லேகாகரின் முக்கியவேலை. நிலப்பட்டாத் தஸ்தவேஜி எழுதி வைப்பதும் இவர் வேலை. தச்சன், காவற்காரன், குசவன், நாவிதன், வண்ணான், உபாத்தியாயர், ஜோஸியர், கவி, தண்ணீர் வினியோகம் செய்பவர் ஆகிய பன்னிருவருடைய வேலையையும் கிராமாதிகாரி மேற்பார்வையிட்டு வந்தார். கிராம லேகேகரோ நாணயவாணி, தட்டான், தலைப்பாகை செய்பவன், தோட்டக்காரன், தண்ணீர் காவடிக்காரன், மேளகாரன், நாகசுரக்காரன், வாணியன், செக்கலியன், போலீஸ் தலையாரிகள், குருக்கள்,

ஆகிய 12 பேர்களையும் மேற்பார்வையிட்டு வந்தார். "கிராமாதிகாரியின் அதிகாரத்திற்குட்பட்டு ராஜி ஏற்படாத சச்சரவுகள் அக்காலத்தில் பஞ்சாயத்தார்களால் விசாரித்து முடிவு செய்யப்பட்டதைக் கவனிக்குமிடத்து இக்காலத்து ஜூரி விசாரணை ஞாபகத்திற்கு வருகிறது." சிற்சில கிராமங்களில் மேற் கூறியுள்ள 24 வேலைக்காரர்களுக் கதிகமாகவும் குறைவாகவு மிருந்ததுண்டு. இது எவ்விதமாயினும், அந்தந்த ஊர் ஜனங்களின் தேவைக்கேற்ற சங்கீதம், காவ்யம் போன்ற எவ்வித நாருக்கான அபிலாஷையையும் பூர்த்திப்படுத்துவதற்கான ஹேதுக்களுமிருந்தன. தற்காலத்தில் மிக நாகரீகம் வாய்ந்ததான இங்கிலாந்திலிருக்கும் பாரிஷிலும், அமெரிக்கா, பிரான்ஸ்தேசக் கம்யூன்களிலும், இக்காலத்திலும் இத்தகைய இனங்களுக்குச் செலவனுமதிக்கப்படவில்லை. இதிலிருந்து நம் பண்டைக் காலக் கிராமங்கள் தத்துவக்ஞானிகள் கனவில் தோன்றும் விசித்திர தேசங்களாக விருந்தனவென்பது விளங்கும்.

பல கிராமங்கள் கொண்டது ஒரு தேசம் அல்லது ஜில்லாவாகும். தேசாதிகாரி, தேச லேகாகர்கள் என்ற அதிகாரிகள் அவற்றில் நிர்வாகம் புரிந்தனர். இவர்களுக்குட்பட்டுப் பல வேலைக்காரர்களுண்டு. பட்டிணங்கள், கிராமங்களை மாதிரியாகக்கொண்டு அமைந்திருந்தன; இவ்விரண்டில் கிராமங்களே உயர்வாகத் தோன்றின. புராதனகாலத்தில் ஸ்தலஸ்தாபனங்கள் இவ்வளவு உன்னத ஸ்திதியிலிருந்திருக்கின்றன. இவற்றை எண்ணுந்தோறும், வருங்காலத்திலும்கூட உள்ளூர்ச் சச்சரவோ, வெளியேயிருந்து மேலாதிகாரிகளின் அனுவசியத் தலையீடோ இல்லாமலிருப்பின், அவ்வளவு உயர்ந்த ஸ்திதி ஏற்படுமென்றத் திடநம்பிக்கை நம்மனதில் தோன்றுகிறது

நம் மாகாணத்தில் பஞ்சாயத்துக ளனேகம் ஏற்பட்டு அவற்றில் பெரும்பாலானவைத்திருப்திகரமாகவும் வேலை செய்துவரும் இச்சமயத்தில் பஞ்சாயத்தபிமானிகளும், பஞ்சாயத்துக் கௌரவ ஸ்தாபகர்களும் சேர்ந்து இந்த ராஜதானியின் தலைநகரில் "மதராஸ் மாகாணப்பஞ்சாயத்து யூனியன்" ஒன்றை ஏற்படுத்தியிருப்பது ஒரு நல்ல காரியமாகும். பஞ்சாயத்துகள் ஒன்றோடொன்று இணங்கி வேலைசெய்யவும், இவற்றின் நலத்தை நாடவும், இவை நன்றாக வேலை செய்வதற்கேற்ற யோசனைகள் கூறவும், பாடுபடுவதே இந்த யூனியன் கொண்டிருக்கும் நோக்கங்களாகும். இந்த உத்தேசம் கைகூட கிராமப் பஞ்சாயத்தைப் பிரசுரிப்பதையும், கிராம ஆட்சி சம்பந்தமாகப் புஸ்தகங்கள், பிரசுரங்கள் வெளியிடுவதையும், கிராம





ஸ்தாபகர்கள், பஞ்சாயத்து போர்டுகள் வேலைக்காரர்கள் முதலியவர்களுக் கவசியமானப் பயற்சியளிப்பதற்கான வகுப்புகள் நடத்துவது முதலிய வேலைகளையும் இந்த யூனியன் மேற்கொண்டிருக்கிறது. மாகாணக் கவர்ன்மெண்டுப் பஞ்சாயத்துப் புல்லடீன் பிரசுரிப்பதை நிறுத்தியதனுல் மதராஸ் மாகாணக்கூட்டுறவு யூனியன் அதிகப்பணம் செலவிட்டுச் சிரமத்துடன் கிராமப் பஞ்சாயத்தைப் பதிப்பித்து வந்திருக்கிறது. இந்த வேலையைக் கிரமமாகச் செய்யவேண்டியது மாகாணப் பஞ்சாயத்து யூனியன் பொறுப்பாகும். பஞ்சாயத்துகள் திருப்தியடையுமாறு அவற்றின் விசுவாசத்திற்குப் பாத்திரமான இவ்வேலைப்பொறுப்பை கூட்டுறவு யூனியனிடமிருந்து மேற்கொள்ளவேண்டியது இப்புதிய யூனியனுடைய கடமையாகும். நம் நாட்டில் கிராமஸ்தாபனங்கள் நன்றாக வேலை செய்யவேண்டுமானல், பாமரர்கள் பொதுஜன சேவையில் சிரத்தைகொண்டு உழைக்க ஊக்கமூட்டி ஞானம் புகட்டவேண்டியது அவசியமாகிறது. கிராமத்திலிருக்கும் பெரியோர்களடங்கிய சபைகள்தான் இவ்வேலையைச் சரிவரச் செய்யக்கூடும். வாக்குரிமை, ஸ்தலஸ்தாபனங்களின் அமைப்பு, நிர்வாகவகை, மாகாணக் கவர்ன்மெண்டு விஷயம், சுகாதாரம், தேகசௌக்கியம் முதலியவற்றைப் பற்றிச் சகல தகவல்களையும் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் புஸ்தகங்கள் அச்சிட்டு வழங்குதல் அதியவசியமான வேலையாகும். இந்த யூனியன் இவ்வேலையைச் செய்யப்போவதாகத் தீர்மானித்திருப்பதைக் கவனிக்கச் சந்தோஷமேற்படுகிறது. கிராமங்களில் விஷயங்களையறிந்துகொண்டு உற்சாகமாக வேலை செய்யக்கூடியவர்களைப் பழக்கவேண்டியது மவசியமாகிறது. இவ்வேலைக் கேற்றவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சியளிக்க இந்த யூனியன் முன்வந்திருப்பதும் ஒரு சரியான ஏற்பாடு. சங்கச் சட்டத்தின் கீழ் இந்த யூனியனைப் பதிவு செய்ய முயற்சிகள் நடந்துவருகின்றன. இந்த யூனியன் மேன்மேலும் விருத்தியடைந்து இதன் நோக்கம் கூடிய சீக்கிரம் கைகூட வழிபிறக்க வேண்டுமென்று நாம் ஆவலாக விரும்புகிறோம்.

---

## பத்திராதிபரின் குறிப்புகள்.

**குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்தல்.**

மிஸ் மேரியெட்டா ஜான்ஸன் என்னும் மாது பேர்ஹோப் என்னுமிடத்திலிருக்கும் தம் பண்ணையில் சம்மிரு குழந்தைகளை மாத்திரம் கொண்டு ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பித்ததாகக் கூறப்படும் செய்தியை இம்மாகாணத்திலிருக்கும் ஆரம்பக் கல்விப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும். "குழந்தைகளைக் கூடுமானவரைத் துரிதப்படுத்தவேண்டியதவசியம்" என்னும் வசனம் இங்கு அனுஷ்டானத்திலில்லை ஆகையினால்தான் "மார்க்கு, ராங்க், ப்ரொமோஷன்" ஆகியவற்றை நாடிப் பாடுபடுவது என்னும் வழக்கமோ, உபாத்தியாயரைப் பிரீதிப்படுத்தவோ, அவர் கோபத்திற்காளாகாமல் தப்பிக்கவோ பாடுபடுவது என்னும் வழக்கமும் இங்கில்லாததனால் சிறுவர்களுடைய விளையாட்டு ஆசை நசியாமலும், தேகத்திடம் குறையாமலும் இருக்க நேருகிறது. குழந்தைப் பருவத்தில் தோல்வியென்ற எண்ணமே மனதில் தோன்றக்கூடாதென்பது அம்மாதின் நோக்கம்.

அவர்கள் குதூகலமாகவும் சந்தோஷமாகவுமிருப்பதற்கான ஏற்பாடுகள் பலவும் செய்து கொடுக்கப்படுகின்றன. உபாத்தியாயர்கள் ஆடிப் பாடுவதைக் கவனிக்கும் சிறுவர்கள் தாங்களும் பாடிச் சங்கீதம் கற்க முற்படுகிறார்கள். உபாத்தியாயர்களுடன் அவர்களும் வெளிப்புறங்களில் சென்று இயற்கையமைப்பில் விசித்திரமாகக் காணப்படும் சகல விஷயங்களையும்பற்றிப் பல சந்தேகக் கேள்விகள் கேட்கிறார்கள். தங்கள் தேசத்திலுள்ள பெரியார்களைப்பற்றிய அதிசயமான சம்பவங்களைப் பற்றி உபாத்தியாயர்கள் மனோ எழுச்சி உண்டாகுமாறு வருணிக்கிறார்கள். இதனால் தங்கள் தேசச் சரிதம் கற்க நேருகிறது. பல வஸ்துக்களைக் கையாளுவதனால் எண்களைப் பார்க்காமலே இலக்கம் கற்க நேருகிறது. ஸ்தூல வஸ்துக்களில் அதிகக் கவனம் செலுத்தி அவற்றின் தன்மையைக் கிரகித்து ஆடிப்பாடிக் கொண்டாடுகின்றனர். 7-வது பிராயத்தில் இவர்கள் எண்ணும் எழுத்தும் போதிக்கப்படுகின்றனர். பத்து வயது முதல் புஸ்தகம் படிக்கிறார்கள். வயதாக அனுபவமும் முதிர்வதனால் இவர்கள் தீக்ஷணியமாகவும், புத்திசாலிகளாகவும் விளங்குகிறார்கள். மேலே படிக்கப் படிக்கப் பிரகாசமாகவிருக்கிறார்கள். இதரப் பள்ளிக்கூடங்களிலிருக்கும் மாணாக்கரை விட அதிக புத்திசாலிகளாயிருக்கிறார்கள். கல்வி கற்பதனால் எக்குழந்தையும் குணத்திலோ, புத்தியிலோ, சரீரத்திடத்திலோ கெட்டுப்போகவில்லை என்பதை அவர் தெரிவிக்கிறார்.

இந்த மாதின் பள்ளிக்கூடத்தின் கியாதியும், அங்கு போதிக்கப்படும் முறைகளும் நாடெங்கும் பிரபலமாகி அனேக தந்தைமார்கள் தங்கள் குழந்தைகளை இந்தம்மாளிடம் சம்ரக்ஷணைக்கனுப்பி வருகிறார்கள். தற்சமயம் இந்தம்மாள் 9 கட்டிடங்களில் பள்ளிக்கூடங்களேற்படுத்தி 20 சிப்பந்திகளைக்கொண்டு வேலை நடத்தி வருகிறார். ஆடவர்களும், ஸ்திரீகளும் சேர்ந்து ஒருமிக்க வாழ்ந்து வருவதனால்





அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பாடப்பயிற்சி நாள் முதலே பரஸ்பர சுபாவங்களைத் தெரிந்துகொள்ள நேருகிறது. ஆகையினால்தான் இந்த மாது தம் ஆச்ரமத்தைக் கல்வி கற்பதற்கும் சேர்த்து உபயோகிக்கலானார். நம் நாட்டுப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் யாவரும் இவ்விஷயத்தை நன்கு தெரிந்துகொண்டு, இவர்கள் தங்களுக்குள்ள குழந்தை மனோபவ ஞானத்தை உபயோகமான வழியில் பிரயோகிக்க இம்முறைச் சாதகமாயிருப்பதையும், நம் பள்ளிக்கூடங்கள் ஒவ்வொன்றிலும் இம்முறைக் கையாளப்படலாமென்பதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

**கனடாவில் சுதேசியம்.**

வட அமெரிக்காவிலுள்ள கனடா தேசம் 36,84,315 சதுர மைல விஸ்தீரணமுள்ளது. இதன் ஜனத்தொகை 87,88,483. இந்நாடு நீர் வளம், நிலவளம் பொருந்திய செழிப்பான நாடு. கைத்தொழில்கள் தற்கால முறையில் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. அங்குச் சகல சாமான்களும் ஏராளமாகச் செய்யப்படுகின்றன. அத்தேசத்தவருக் கவசியமான எல்லாப் பண்டங்களும் உள் நாட்டிலேயே தயாராகின்றன. பரதேசத்தவரை எதிர்பார்க்கவேண்டிய அவசியமில்லை. உலகத்தில் தற்காலச் சம்பிரதாயத்தில் பிற தேசங்களுடன் வர்த்தகம் செய்து லாபமடையவேண்டுமென்றப் பழக்கத்தை யனுசரித்துக் கனடாவும் வெளிதேசங்களிலிருந்து சாமான்கள் ஏராளமாகத் தருவித்து வருகிறது. இப்பொழுது ஐரோப்பிய தேசங்கள் பிறநாட்டுச் சாமான்கள் தங்கள் நாட்டில் வரமுடியாவண்ணம் பாதுகாப்பு அணைகள் கட்டிச் சுதேசி சாமான் பிரசாரமும் பலமாகச்செய்வதைக் கனடா உணர்ந்துகொண்டு "கனடாதேசச் சாமான்களையே வாங்குங்கள்" என்றப் பிரசாரம்செய்யக் கற்றுக்கொண்டுவிட்டார்கள். இப்பொழுது அவ்வூரில் 122 பத்திரிகைகள் இப்பிரசாரத்தையே முக்கியமாகச் செய்துவருகின்றன. இப்பிரசாரத்திற்காக 158 ஸ்திரீகள் சங்கங்க ளே[illegible]ட்டிருக்கின்றன. அம்மாகாண முழுவதும் வசீகரமானப் பொருட்காட்சிகள் [illegible]படுகின்றன. இதன் பலனாக் கனடாவில் தற்சமயம் கன[illegible] நடத்தப்பட்டு வேறெதையும் வாங்க அவ்வூர் ஜனங்கள் இஷ்டப்படவில்லை. சாமான் தவிர பிரசாரம் செய்யும் ஸ்தாபனங்களுக்கு கவர்ன்மெண்டு விலே. இத்தகையப் பிரசாரம் வருகிறது. இந்தியா கவர்ன்மெ[illegible]ஸன் இதையுணர்ந்து [illegible] ஆதரவளித்து வருகிறது. இந்தியா கவர்ன்மெண்டும் [illegible] தேனைஇந்நாட்டுக் கைத்தொழிற்சாலைகள் குடிசைத்தொழி[illegible] போல் சுதேசிக் [illegible]ல்கள் யாவற்றுக்கும் [illegible]யான உதவிபுரிந்துக் கனடாவைப் போல் ஆதரவளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

**மலேரியா தடுக்கும் வழிகள்.** [மலேரி[illegible] தடுக்[illegible]வைத் [illegible]மலிவான [illegible]றைகள்.]

சென்ற மழை காலத்தில் (ஜூலை, ஆகஸ்டு மாதங்களில்) மலேரியா என்னும் விஷ ஜுரம் பரவாமல் தடுக்க அஸ்ஸாம் மாகாணத்தில் நௌகாங்க் பிரதேசத்தில் அனுஷ்டிக்கப்பட்ட முறைகள் மலிவாகவும் இலகுவாகவுமிருந்தன. பஞ்சாயத்துகளோ யூனியன்களோ சேர்ந்து ஒத்துழைத்து இவ்வழியில் வேலை செய்யின் தேசமெங்கும் நன்மை ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை. "கொசு இல்லாவிடில் மலேரியா வராது" என்பது வைத்தியரின் போதனை. இப்போதனையைத் தழுவியே சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. கொசு வளர இடமில்லாமல் சாக்கடை ஜலத் தேக்கம் யாவும் சுத்தமாகவிருக்கவேண்டுமென்று

நோட்டீஸ்கள் பிறப்பிக்கப்பட்டன. முனிஸிபல் சாக்கடைகள் வெகு சுத்தமாக அலம்பி விடப்பட்டன. வீடுகளில் கிணறுகளுக்கருகில் தண்ணீர் கொஞ்சங்கூடத் தேங்காமல் மூடிச் சம தரையாக்கப்பட்டன. கொசுக்கள் பதுங்கக்கூடிய ஈரத் தொட்டிகள், உடைந்த தகரங்கள், கண்ணாடித் துணுக்குகள் முதலிய யாவும் சமீபத்திலில்லாமல் அப்புறப்படுத்தப்பட்டன. பொசுக்காதரவாக எங்கும் அசுத்தம் குவியாமல் பரிசுத்தமாகக் கூட்டப்படவேண்டுமென்று தோட்டிகளுக்குக் கட்டளையிடப்பட்டது. பொடாஷ்யம் பெர்மாகனேட், எலெக்ட்ராலிக் க்ளோரேன் முதலியவற்றைக்கொண்டும் வேறு பல வழிகளிலும் கொசு முட்டைகள் நாசமாக்கப்பட்டன. பெரிய கொசுக்கள் நெருப்புப்புகை மூலம் த்வம்ஸமாக்கப்பட்டன. கொசுக்கடிக்க இடமில்லாமல் ஏழைகள்கூடக் கொசுவலைகள் கட்டிக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டுவந்தது. கொசுமுட்டை யிருப்பதாகச் சந்தேகமேற்பட்டால் அந்த விடங்களில் கெரோஸின் எண்ணெய் துளி தெளிக்கப்பட்டு வந்தது. ஜனங்கள் இந்த முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்வதுடன், மலேரிய ஜுரமேற்பட்டதாகச் சந்தேகமேற்பட்டால் உடனே க்வினைன் சாப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஜுரம் கண்டவர்கள் ...வில் சர்ஜனால் அதி ஜாக்ரதையாகக் கவனித்துச் சிகிச்சையளிக்கப்பட்டனர். இரண்டு மாதங்களாக ஓயாமல் அதி உஷாராயிருந்து இவ்வளவுப் கடுமையான ஏற்பாடுகள் நடந்திருக்கையில் கொசுக்கள் எங்கேனும் விருத்தியடையுமா? அவ்வூரில் இப்பொழுது அதிகமாகக் கொசு மலேரியா உபத்ரவமில்லை யென்று கூறப்படுவதைக் கேட்க ஆச்சரியமுமேற்படுமோ?



# பஞ்சாயத்துகளின் வரி விதிக்குமதிகாரம்.

## (கீழக்கோதாவரிக் கோடிப்பள்ளிப் பஞ்சாயத்து ஸ்தாபகர்)

ஸ்ரீமான் வி. சேஷகிரி ராவ் எம். ஆர். ஏ. எஸ். எழுதியது.

லோகல்போர்டு இன்ஸ்பெக்டர் கவர்ன்மெண்டிற்கனுப்பிய ரிபோர்ட்டு ஒன்றில் புதிய மதராஸ் லோகல் போர்டுச் சட்டப்பிரகாரம் ஏற்பட்டுள்ள வரிவிதிக்கும் அதிகாரத்தை 1931-32-ல் உபயோகிக்க சிலப் பஞ்சாயத்துகள் காலா காலத்தில் முற்படாததனால் 1930-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 25-ம் தேதியன்று இருந்த மாதிரியே வரிக் கட்டணங்கள் வசூலிக்கப் பஞ்சாயத்துகளுக்கு அதிகாரமிருப்பதாக ஒரு விதி ஏற்படுத்த வேண்டுமென்று யோசனை கூறியிருந்தார். இந்த யோசனையைக் கவர்ன்மெண்டு ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப 18-8-31-ம் தேதியிட்ட ஜி ஓ நம்பர் 3,000 பிறப்பித்தார்கள். இந்தச் சலுகையை லோகல் போர்டு யூனியனல்லாதப் பஞ்சாயத்துகள் விஷயத்தில் சாசுவதமாகச் செய்யவேண்டும்; இல்லையேல் 10-வது ஷெட்யூல் விதியின்கீழ் இன்னும் கொஞ்சக்காலம்வரை இச்சலுகை அமுலிலிருக்குமாறு நீடிக்கச் செய்யவேண்டும். இவ்விதம் செய்யத் தவறினால் இம்மாகாணமுழுதிலுமுள்ள சிறியப் பஞ்சாயத்துகள் பணமில்லாமல் அவஸ்தைப்பட நேரும். பழைய பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழேற்பட்டிருந்தப் பஞ்சாயத்துகளுக்கிருந்த சௌகரியங்கள் வசதிகளுடன் அதிக வசதிகளிருந்தா லல்லது புதிய லோகல் போர்டுச் சட்டத்தினால் ஒருவித நன்மையு மேற்பட்டதாகமாட்டாது.

பழையப் பஞ்சாயத்துச் சட்டத்தின் கடைசியில் சேர்க்கப்பட்டிருந்த ஷெட்யூல் (a)-யில் குறிப்பிட்டிருந்த 26 (i) (b) விதியின்கீழ் காணப்படும் 10, 21, 30, 31, 34, 35 இனங்களுக்குட்பட்ட தொழில் வர்த்தகம் முதலியன புதிய மதராஸ் லோகல் போர்டுச் சட்டத்தில் 193-வது பிரிவிற்குட்பட்ட 7-வது ஷெட்யூலில் லைஸன்ஸ் கட்டணத்திற் குட்படுத்தப்பட்டிருக்கின்றன. 7-வது ஷெட்யூலின்கீழ் இவற்றிற்குக் கிடைக்கும் லைஸன்ஸ் தொகைப் பழையப் பஞ்சாயத்தின்கீழ் வசூலான தொகையைவிடக் குறைவாகவேயிருக்கும். ஒரு குக்கிராமத்தில் ஒவ்வொரு சௌகாரும் தம் தொழிலுக்காக மாதம் கால் ரூபாய் கொடுப்பதுச் சுலபமாக முடியும். ஆனால் வருடாந்திர லைஸன்ஸ் கட்டணமாக ஒருமிக்க ரூ 2 அல்லது ரூ. 3 கொடுப்பது சிரமமாகும். பாக்கியுள்ள 39 இனங்களுக்கும் வரிவிதிக்கப் புதிய சட்டம் 75 (2) வது பிரிவின்கீழ் அனுமதியளிக்கப் படவேண்டும்; இது பழைய சட்டம் 26(a)க்குச் சரியானது. இவ்விதம் அனுமதிக்காவிடிலோ, இந்த இனங்களைப் புதியசட்டம் 98-வது விதிக்குட்பட்ட 9-வது விதியின் பிரகாரம் ஏற்பட்டிருக்கும் 4 வது ஷெட்யூலில் காணப்படும் தொழில் வரி இனங்களாகப் பாவிக்கப் படவேண்டும். இவ்விதம் இவற்றைத் தொழில்வரிகளாகப் பாவித்தால் 1-4-32 முதல் பழைய வரிகளும், கட்டணங்களும் ரத்தாகிவிடும் அவ்விதம் நேரின் ஏழைப் பஞ்சாயத்துகளின் வருமானம் மிகவும் குறைந்துபோய்விடும்.

சௌரப்பட்டுக் கிராமத்தில் தானியங்கள் வியாபாரத் தரகர்களுக்கு ரூ 20 வரி விதிக்கலாமென்று லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் 10-11-24ம் தேதியிட்ட R. Dis. 166-ல் உத்திரவின் மூலம் அனுமதியளித்திருந்தார். இவ்வரி ஜனங்களால் மனமொப்பித் தாராளமாகக் கொடுக்கப்பட்டு வந்ததனால் பஞ்சாயத்துச் சுலபமாக அதை வசூலித்து வந்தது. அந்த அனுமதி 1932ம் வருஷம் ஏப்ரல் முதல் தேதியோடு ரத்தாகிவிட்டமையால் அப்பஞ்சாயத்து, அதைத் தொழில் வரியாகப் பாவிக்கவேண்டியிருக்கிறது. இதை வசூலிக்கவேண்டியிருப்பின், அத்தொழில் செய்பவர்கள் 9-வது விதிக்குட்பட்ட 4-வது ஷெட்யூல் பிரகாரம் வருஷம் ரூ. 1,800 முதல் ரூ. 5,000-ம் வரை வருமானமுள்ளவர்கள் என்பதைப் பஞ்சாயத்தார் நிரூபிக்கவேண்டிய அவசிய மேற்படுகிறது. கிராமாந்திரங்களில் உள்ளத் தரகர்கள், சௌகார்கள், இதரச் சில்லரை வியாபாரிகள் சரிவரத் தினசரிக்குறிப்புக் கணக்குகள் எழுதிவைப்பதில்லையாதலால் சாதாரணத் தணிக்கர் மூலம் அவர்களுடைய வருமானத்தை நிரூபிப்பது சாத்யமாகாத விஷயம். பஞ்சாயத்துச் சட்டப் பிரகாரம் தரகருக்கு விதிக்கப்படும் ரூ. 20 அவர் நடாத்தும் தொழிலுக்கேற்பட்டதே யல்லாது அவரடையும் லாபத்தைப் பொறுத்ததேயில்லை. ஆனால், புதிய சட்டத்தின் கீழோ தொழில் வருமானம், அத்தொழில் சம்பந்தப்பட்டவர் அடையும் லாபத்தைக் கணக்கெடுத்து விதிக்கவேண்டியதாகிறபடியால், இது பஞ்சாயத்தாராலும் தரகர்களாலும் சுலபமாக ஏற்றுக்கொள்ள முடியாமற் போகிறது. இதனால் மனஸ்தாபம், மாச்சரியம், விரோதமே ஏற்படக்கூடும். ஷெட்யூல் 14-வது இனமாகிய கள்ளுக்கடை, அராக்கு, கஞ்சா, அபீன்கடைக் குத்தகைக்காரர்களுக்கு பல பஞ்சாயத்துகளில் கடைக்கு ரூ. 5 முதல் 30 வரை விதிக்கலாமென்றோ அல்லது அவர்கள் கவர்ன்மெண்டிற்குச் செலுத்த வாடகைவிகிதத்தில் ரூபாய்க்கு இத்தனை தம்பிடிகள் என்றோ வரி விதிக்கலாமென்பது கவர்ன்மெண்டு உத்தரவு. இவ்வினங்களைத் தொழில் வரியாக விதிப்பதா யிருப்பின் பஞ்சாயத்துகளுக்கு இதன்மூலம் கிடைக்கும் வருமானம் மிகச் சொற்பமேயாகும். சிலவிடங்களில் ஒன்றுமே கிடைக்காமலுமிருக்கக்கூடும்.

பஞ்சாயத்துகள் வரிக்கட்டணங்கள் விதிக்கும் விஷயத்தை லோகல்போர்டு இன்ஸ்பெக்டர் 13-10-32ல் R. Dis. 458 ம் நெம்பர் சுற்றறிக்கையில் தெரிவித்திருக்கிறார். அதன் பிரகாரம் கவனித்தால் பஞ்சாயத்துகள் பலவற்றில் (1) அவுரி, (2) எண்ணெ செக்குகள், (3) தயிர், பால் காவடிகள், காய்கறி, தோல், பழக்கூடைகள், புல்கட்டுச் சுமைகள், (4) ஆட்டுமந்தைகள், ஸ்டாம்பு வெண்டர்கள், சில்லரைக் கண்டிராக்டர்கள், தையற்காரர் கடைகள், ஒற்றை இரட்டை மாட்டு வண்டிக்காரர்கள் முதலியவர்களிடமிருந்து வசூலாகக்கூடிய தொகை அணுக்கணக்கில்தான் இருக்குமென்பது விளங்கும். சில்லரைக் கடைக்காரர்களிடமிருந்து கொஞ்சம் ரூபாய்களும் அப்காரி ஷாப் கண்டிராக்டர்களிடமிருந்து அவர்கள் கவர்ன்மெண்டிற்குச் செலுத்தும் வாடகை விகிதத்தைக்கொண்டு தம்பிடிக்கணக்கில் வசூலாகும் தொகை சொற்பரூபாய்களும் கிடைக்கலாம். கவலையதிகமாகவும், தேவை குறைவாகவுமுள்ளச் சிறிய கிராமங்களிலிருக்கும் பஞ்சாயத்துகளின் வருமானம் இவ்விதமாயிருக்கிறது. இவை யாவற்றையும் தொழில் வரியாக வசூலிக்கவும் முடியாது.





ஜன நெருக்கமுள்ளப் பழைய யூனியன்போர்டு எல்லைகளில் வீட்டுவரியும், தொழில்வரியும் விதித்தால் போதிய வருமானமேற்படலாம். தாலுக்கா ஆபீஸ், டிபுடி தாசில்தாராபீஸ், ஜில்லா முன்ஸீப்கோர்ட்டு, சப் ரெஜிஸ்திரார் ஆபீஸ், ஸர்க்கில் இன்ஸ்பெக்டராபீஸ் போன்ற காரியாலயங்க ளிருக்குமிடங்களிலும், வக்கீல்கள், பெரிய வியாபாரிகள், ஆலை முதலாளிகள் போன்றச் சரிவரக் கணக்குகள் எழுதிவைப்பவர்க ளிருக்குமிடங்களிலும், இவ்வித வருமானம் சுலபமாக வசூலாகக்கூடியது. இவ்விதமான யூனியன் போர்டுகளில், பிரஸிடெண்டு ஒன்றும் தெரியாதவராயிருந்தாலும் அவருக் குதவிபுரிந்து வரியைச் சரிவர வசூலிக்கத் திறமைவாய்ந்த குமாஸ்தாவைச் சம்பளத்திற்கு வைத்துக்கொண்டு சட்ட விதானைகளையும், கோர்ட்டுத்தீர்ப்புக்களையும் எடுத்துக்காட்டித் தக்கவழியில் நிர்வாகம் செலுத்துவது சாத்தியமாகும். ஆனால், கிராமப் பஞ்சாயத்துகளிலோ, கிராமக் கூட்டுறவுச் சங்கங்களைப்போல் கௌரவப் பிரஸிடெண்டு, கௌரவக் காரியதரிசிகளைக்கொண்டுத் தப்புகள் பல செய்து விதிகளுக்கு மாறாகப் பலகாரியங்களை நடத்தி இவை அடிக்கடி கணக்குச் சோதகர்கள் மேற்பார்வையிடும்பொழுது பரிகரிக்கப்பட்டு வேலை நடத்தப்படவேண்டியிருக்கிறது. கூட்டுற வியக்கத்தில் கூட்டுறவு சூபர்வைஸர் அல்லது இன்ஸ்பெக்டர் தப்பிதங்களைத் திருத்த ஏற்பட்டுளர்; பஞ்சாயத்திலோ அதன் தலைவர் செய்யும் தப்பிதத்தைக்காட்டிச் சரியான வழிகாட்ட ஒருவரும் கிடையாது. ஆகையினால்தான் பஞ்சாயத்து வரிகள் கிராமங்களுக் கேற்றவாறுச் சுலபமாக விதித்துச் சுலபமாகச் செலுத்தவும் வசூலிக்கவும் சாத்யமானவழியில் இலகுவாக ஏற்படவேண்டிய தவசியமாகிறது.

இத்தகையக் கஷ்டங்களை எதிர்பார்த்தே கவர்ன்மெண்டாரும் பழைய யூனியன்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வித்தியாசம் பாராட்டியிருக்கின்றனர். இவை பின் வருபனவற்றில் பிரத்தியக்ஷமாகத் தெரிகின்றன.

(1) பஞ்சாயத்துகளின் நிர்வாக ரிப்போர்ட்டுகள் சுலபமாகத் தயாரிக்க வழி ஏற்பட்டிருக்கிறது; பழைய யூனியன்களோ பெரிய புஸ்தகம்போல் பலவிதத் தகவல்கள் அளிக்கவேண்டியிருக்கிறது.

(2) யூனியன்களில் வீட்டு வரிக் கட்டாயமாக விதிக்கப்படவேண்டும்; பஞ்சாயத்துகளிலோ இவ்வரி அந்தக் கிராம வாசிகளின் இஷ்டத்தைப் பொருத்தது.

(3) யூனியன்களின் கணக்குகள் அனுபவ முதிர்ந்த ஆடிடர்களைக்கொண்டு தாலுக்கா போர்டு ஜில்லா போர்டுக் கணக்குகளுடன் தணிக்கை செய்யப்படவேண்டும்; பஞ்சாயத்துக் கணக்குகளோ தாசீல்தாரால் தணிக்கை செய்யப்படுகிறது.

(4) யூனியன் போர்டு மனைகள் சர்வே செய்யப்படவேண்டியதவசியம்;

(5) தாலுக்கா போர்டு, மராமத்திலாகா வேலைகளைப் பஞ்சாயத்துகள் குத்தகையாகச் செய்யலாம்; யூனியன் போர்டு அவ்வாறு செய்யக்கூடாது.

(6) பஞ்சாயத்துகள் சஞ்சாயத்து வேலை வாங்கலாம்; யூனியன் போர்டுகளோ கண்டிராக்டாகத் தான் வேலை வாங்கவேண்டும்.

(7) பஞ்சாயத்துத் தேர்தல்கள் நேர்முகமாகக் கைகளைக் காட்டி நடைபெறுகின்றன! யூனியன் போர்டுத் தேர்தல்கள் இரகசியமாகப் பதிவு செய்யப்

படும் வோட்டுகள்மூலம் நடைபெறவேண்டும். பஞ்சாயத்து வேலைகளும் இவற்றின் விஸ்தீரணமும் சிறியவையானபடியால்தான் இவற்றிற்கு இவ்வளவு சலுகைகளளிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் வருமானமும் மிகக் குறைவானபடியால் தகுந்த யோக்கியதைகளுள்ள குமாஸ்தாக்கள் நியமிப்பது சாத்தியமில்லையென்பது இதற்கொரு காரணமாகும்.

1930 ம் வருஷம் ஆகஸ்டுமாதத்தில் விதிக்க அனுமதிக்கப்பட்ட வரி முதலியன மிகச் சுலபமானவையென்றும் அவை பஞ்சாயத்துகளுக் கேற்றவையென்றும் கருதியே லோகல் போர்டு இன்ஸ்பெக்டரினால் அவ்வழி சிபார்சு செய்யப்பட்டது. அந்த ரிபோர்ட்டைக் கவனித்தால் சிலப் பஞ்சாயத்துகளில் சுலபமாயுள்ள வரி வகையறுக்கள், வேறு சிலப் பஞ்சாயத்துகளுக்குப் பொருத்தமானதாகக் காணப்படவில்லையென்பதும் விளங்கும் ஆகையினால்தான், ஒருபஞ்சாயத்திற் கோர் விகிதமும் மற்றோர் பஞ்சாயத்திற்கு வேறு விகிதமும் விதிக்கப்பட்டது. இதைக் கொண்டுதான் 1930-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 25 ம் தேதி உத்தரவின்கீழ் அனுமதிக்கப்பட்ட வரிக்கட்டணங்களைப் பொதுவாக எல்லாப் பஞ்சாயத்துகளுக்கும் விதிக்கக்கூடாதென்று வற்புறுத்தப்படுகிறது.

தவிரவும், மாதா மாதம் வரி செலுத்துவது சுலபமாயிருப்பதனாலும், வரி வசூலிப்பவருக்கும் பிரயோஜனப்படக் கூடியதாயிருக்கின்றமையாலும், அனேகப் பஞ்சாயத்துகள் வரிகளை மாதாமாதம் வசூலித்து வருகின்றன. புதியச் சட்டப் பிரகாரம் வீட்டுவரியும் தொழில் வரியும் அரை வருஷத்திற் கொருதடவையாகவும், லைஸன்ஸ் கட்டணம் வருடாந்திரமாகவும் வசூலிக்கப்படவேண்டும். இதுவரைச் சிறுகச் சிறுக மாதாமாதம் இவ்வரியைச் செலுத்திவந்திருப்பவர்களுக்கு மொத்த மொத்தமாகப் பணம் கட்டுவதென்றால் கஷ்டமாகவிருக்கும்

ஆகையினால்தான் 25-8-30-ல் வரிக்கட்டண சம்மந்தமாக ஒவ்வோர் பஞ்சாயத்திலும் எவ்வித வழக்கம் அனுஷ்டானத்திலிருந்ததோ அதையேத் தழுவி நிற்க வேண்டுமென்றுக் கவர்ன்மெண்டு உத்தரவிடவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுவேன். இவ்விதம் இன்னும் கொஞ்சகாலம் நடந்துவந்தால், பிறகு அனுபவத்தின்பேரில் கிரமமான முறையை அனுஷ்டிப்பது ஒரு சிரமமாகவோ நஷ்டமாகவோ இராது. இவ்விஷயம் கவர்ன்மெண்டிற் கேற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஷெட்யூல் 10-வது விதியின்கீழ் இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

---



## சென்னை மாகாண ஸ்தல ஸ்தாபன சங்கம்.

அநேக ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகிகள் அடங்கிய ஒரு சாதாரண கூட்டம் ஏப்ரல் மாதம் 17 ம் தேதி அன்று சென்னை ராயபேட்டையில் இந்திய ஊழியர் சங்கத்தார்கள் கட்டிடத்தில் சென்னை பிரபல அட்வகேட் ஸ்ரீமான வியன்ன பந்துலு அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது அடியில் வரும் தீர்மானங்கள் நிறைவேறின.

1. பஞ்சாயத்து போர்டுகளின் கொள்கைகளைப் பாது காப்பதற்காகவும், போர்டு மெம்பர்களுக்கு யோஜனைகள் கூறி உதவிபுரிவதற்காகவும் சென்னையில் தலைமை காரியாலயத்துடன் ஒரு மாகாணப் பஞ்சாயத்துச் சங்கம் ஆரம்பிக்கப் படவேண்டும்.

2. அடியிற் கண்ட பஞ்சாயத்துப் பிரதிநிதிகளும் பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் கொள்கைகளை ஆதரிப்பவர்களும் அடங்கிய மாகாண பஞ்சாயத்து சபை ஒன்று 1933-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதி முடிவுவரை சபையின் காரியங்களைக் கவனிக்க ஏற்பட்டுளது.

### தலைவர்.

ஸ்ரீமான் வி. ராமதாஸ் பந்துலு அவர்கள், பி.ஏ., பி.எல்.

### உபத் தலைவர்கள்.

ஸ்ரீமான் ஏ. ரங்கநாத முதலியார், பி.ஏ., பி.எல்., எம். எல். ஸி., ஹாஸ்பெட்.
,, வி. வெங்கடசுப்பய்யா, இந்திய ஊழியர் சங்கம், சென்னை.
,, எஸ். வியன்ன, பி. ஏ., பி. எல்., அட்வோகேட், சென்னை.

### காரியதரிசிகள்.

ஸ்ரீமான் ராவ் சாஹிப் என். வெங்கட்ராமய்யர், நாமக்கல்.
,, ஜி. ஹரி சர்வோத்தம ராவ், எம். ஏ., நந்தியால்.
,, யி. நரசிம்ம சௌத்ரி, பாபட்லா.

### உப காரியதரிசி.

போட... ஸ்ரீமான் ஜி. ராம ப்ரம்மம். சென்னை.
களி...

### சபை மெம்பர்கள்.

அ... ...த்தி ராஜூகாரு, பி.ஏ., பி. எல்., எல்லூர்.
ஊ... ...ராஜூகாரு, தாடேபல்லிகூடம்.
ம... ...பாராவ், கோவூர்.
மே... ...ப்புசாமி சௌத்ரி, குண்டூர்.
...தாராமய்யா, பாச்சூர்.

## கிராமப் பஞ்சாயத்து

ஸ்ரீமான் என். பச்சையப்ப வர்மா, குண்டூர்.
,, சுப்பராவ ராசய்யா, தென்னாலி.
,, சாடலபாடா குடம்மரோ, குண்டூர்.
,, டி. எம். ஆதிகேசவலு நாயுடு, செய்யார்.
,, திவான் பகதூர் எம். கே. ரெட்டி, புரசைவாக்கம்.
,, சி. வி. நாயுடு, பி. ஏ., பி. எல். சைதாபேட்டை.
,, ஆர். நாராயண ரெட்டி, கடப்பை.
,, என். சத்யநாராயண, அலமூரு.
,, ஏ. ராமகிருஷ்ண ரெட்டி, கர்நூல்.
,, எம். சிவாராவ், புத்தூர், தென் கன்னடம்.
,, ஆர். அனந்தராவ், திருத்தங்கல், ராமனாதபுரம் ஜில்லா.
,, சித்தன்ன கௌடா மதகசிரா.
,, சி. சேஷகிரி ராவ், கொடிபள்ளி.
,, பட்டாபிராமய்யா, எம். எல். ஸி., மசூலிப்பட்டணம்.

### நியமிக்கப்பட்ட மெம்பர்கள்.

ஸ்ரீமான் ஜெயகரன், காரியதரிசி, மத்ய கிராமப் புனருத்தாரணசபை, ராமனாதபுரம்.
,, டி. ஜி. கோபாலசாமி, ஜோலார்பேட்டை.
,, டி. மணிக்கம்மய்யா, பி. ஏ. பி. எல்., சென்னை.

3. குண்டூர் ஜில்லா பஞ்சாயத்து ஸ்தாபகரும், மற்ற ஜில்லா ஸ்தாபன சங் கங்களின் காரியதரிசிகளும், ஜாயிண்டுக் கமிட்டிகளின் காரியதரிசிகளும், பிர்கா இன்ஸ்பெக்டர்களும், கௌரவ ஸ்தாபகர்களும், இதர அனுதாபிகளும் ஸ்தாபன சங்கங்களை ஒன்று சேர்க்கும் விஷயத்தில் உடனே சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமாய் கோரப்படுகிறார்கள்.

---



## பஞ்சாயத்துகளின் உபயோகமும், கடமைகளும்.

---

### ஸ்ரீமான் வி. வெங்கடசுப்பய்யாவின் பிரசங்கம்.

*சென்ற ஏப்ரல் முதல் தேதியன்று நிடதவோலில் கூடிய மேற்குக் கோதாவரி ஜில்லாப் பஞ்சாயத்தார் மகாநாட்டில் அக்கிராசனம் வகித்த இந்திய ஊழியச் சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் வி. வேங்கடசுப்பய்யா, செய்தத் தலைமைப் பிரசங்கத்தின் சாராம்சம் பின் வருமாறு :—*

இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிப்பதன் மூலம் இந்த ஜில்லாவில் பஞ்சாயத்துகள் செய்துவரும் வேலை விவரத்தைக் கவனித்தறிய எனக்குச் சந்தர்ப்பமளித்திருப்பதற்கு நான் உங்களுக்கு நன்றியுற்றிருக்கிறேன். இந்த ஜில்லாவைப்பற்றி எனக்கு முதன் முதலாக இப்பொழுதுதான் பரிச்சய மேற்பட்டிருப்பதாகவும் எண்ணிவிடக்கூடாது. உங்கள் ஜில்லாவில் கிராமப்புனருத்தாரண வேலையை நடத்த சூபர்வைஸர்களை நியமிப்பதென்று 1926-ம்வருஷம் ஏற்பட்ட புகழ்வாய்ந்த தீர்மானத்தை யனுசரித்து உங்கள் ஆள்கள் சென்னைக்கு வந்திருந்தபொழுது கூட்டுறவு வேலை சம்பந்தமாக நான் அவர்களுக்கு என்னாலியன்ற கிஞ்சித்தளவு உதவி புரிந்திருக்கிறேன். தவிரவும், கிராமப் புனருத்தாரண வேலைப் பயிற்சியளிக்க உபாத்தியாயர்களைப் பழக்கவேண்டுமென்று 1919-ம் வருஷம் தாடேப் பள்ளிக்கூடம் தாலுகா போர்டினால் ஏற்பட்டப் பள்ளிக்கூடத்தை அமைப்பதிலும் நான் சம்பந்தப்பட்டிருக்கிறேன். இப்பொழுது இங்குப் பஞ்சாயத்து வேலையில் புகழுடன் விளங்கும் அரிய குணம் வாய்ந்த பல கனவான்களுடைய பழக்கம் அப்பொழுதுதான் எனக்கேற்பட்டது. இந்த ஜில்லா போர்டின் மதிப்பு வாய்ந்த தலைவராகிய ஸ்ரீமான் பெத்திராஜூகாரு, தாடேப் பள்ளிக்கூடம் தாலுகாவில் அபூர்வபலன் தரும் வழியில் பஞ்சாயத்து வேலைசெய்து வந்திருக்கும் ஸ்ரீமான் காளிதிண்டி கங்காராஜூ காரு, இந்த ஜில்லாவின் நன்மைக்காக இணையற்ற ஊழியம் செய்துவரும் ஸ்ரீமான்கள் சனிவாபு சுப்பராவ் காரு, பாமிடிபதி சத்யநாராயண காரு முதலியவர்களுடைய பழக்கம் எனக்கு அப்பொழுதுதான் ஏற்பட்டது. ஸ்ரீமான் கெங்கராஜூவும், பெத்தராஜூவும் பிரியத்துடன் என்னை அழைத்துச் சென்று இந்த ஜில்லாவில் திறமையாக நடத்தப்படும் பஞ்சாயத்துகளைக்காட்டினார். ரோடுகள், கல்வெட்டுகள் பஞ்சாயத்துகளினால் ஏராளமாகப் பணம் செலவிட்டு அதி நன்றாகக் கட்டப்பட்டிருப்பதையும் நான் பார்த்தறியும் பாக்கியம் பெற்றேன். ஓர் கிராமத்தில் ரூ. 17,000 செலவிட்டு 1¼ மைல் நீளம் கருங்கல் சரளை ரஸ்தாப் போடப்பட்டிருப்பதையும் நான் கண்டேன். மற்றோர் கிராமத்தில் கிராமத்தெருக்களில் இருபக்கத்திலு மிருக்கும் வீடுகள் தெருமட்டத்திற்குமேல் 5 அல்லது 6 அடி உயரமாகக் கட்டப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். இந்த ஊரில் 30 அல்லது 40 வருஷங்களுக்கு முன்னால் வீடுகளின் தரைமட்டம் தெருமட்டத்திற்குச் சமமாகக் கட்டப்பட்டதென்றும், தெருக்களில் வண்டிகள் போய் தேய்ந்து அரிசி படிந்து இவை மழைவெள்ளத்தினால் அடிபட்டுப்போய் 3 அங்குலம் வரைத் தெரு பள்ளமாகிவிட்டதென்றும் கூறப்பட்டது. இதிலிருந்து நதி முகத்துவாரங்களில் போடப்படும் ரோடுமட்டம் உயரமாயிருப்பதுடன் சரளைபோட்டுக்

கெட்டிப்படுத்தப் படவேண்டிய தவசியமென்றும் எனக்குத் தோன்றியது. அந்தப் பஞ்சாயத்துக் கிராமங்களில் உள்ள ஜனங்கள் தங்கள் வேலையைச் செய்துகொடுக்க வேண்டுமென்று பரிவுற்றிருந்ததைக் கண்டு நான் வியப்படைந்தேன். ஜில்லா போர்டு தாலுகா போர்டுகளின் தலைவர்களும் கிராமப் புனருத்தாரண வேலை சூபர்வைஸர்களும் இந்த ஜனங்களுக்கு ஊட்டியுள்ள உணர்ச்சியும் உற்சாகமும் அவர்களுடைய செல்வாக்கும் இவற்றிலிருந்து வெளிப்பட்டது. இந்தப் பஞ்சாயத்துப் பிரதேசத்தை இப்பொழுது ஒருமுறைப் பார்க்க நேர்ந்ததைக்குறித்து நான் உண்மையாகவேச் சந்தோஷ மடைகிறேன்.

பஞ்சாயத்தியக்க வளர்ச்சி விஷயமாக இம் மாகாணம் இந்தியாவிலுள்ள இதர மாகாணங்களை விட முன்னேற்றமடைந்திருக்கிறதென்பதை யாவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். புகழுற்ற காலஞ்சென்ற பனகால் ராஜாவின் தீக்ஷணிய ஞானமும், திடமான உற்சாகத்துடன் இடைவிடாப் பாடுபட்டுள்ள ஸ்ரீமான் என். கோபாலசாமி அய்யங்காரும் மிஸ்டர் ருதர்போர்டும் செய்துள்ள அபிமானமுமே இந்த நிலைமையடைய முக்கிய சாதனமாகும். பஞ்சாயத்துகளை ஏற்படுத்த 1920-ம் வருஷ மியற்றப்பட்டக் கிராமப் பஞ்சாயத்துச் சட்டமொன்று அவசியமாயிருந்த தென்பதில் ஆக்ஷேபனையில்லை இருந்தாலும், அச்சட்ட மியற்றப்பட்ட அடியோடு, ரோடுகள், ஜல சப்ளை, பள்ளிக்கூடங்கள், வாசகசாலை முதலியவற்றை நடத்துவதற்காகப் பஞ்சாயத்துகளில் செலவாகும் தொகையில் சரிபாதி ரெஜிஸ்திரார் ஜனரல் மூலம் கொடுப்பதென்றுக் கவர்ன்மெண்டு புத்திசாலித்தனமாக முன்வந்ததால்தான், நல்ல காரியம் செய்வது சாத்தியமாயிற்று. இந்தப் பண உதவி பெற்றுப் பஞ்சாயத்துகள் கிராமவாழ்க்கை சௌகரியங்கள் செய்துகொடுத்திருக்கின்றன. பஞ்சாயத்துகள் ஏற்பட்டதனால் கிராமாந்திரங்களில் அதற்கு முன்னர் செய்யமுடியாத ஹிதங்கள் பல செய்ய முடிந்திருக்கின்றன. இந்நாட்டில் சுயஆட்சிக்குப் பஞ்சாயத்துகள் அடிப்படையானவை என்று கூறப்படுவது முற்றிலும் பொறுத்தமான வசனம். ஜனவாழ்க்கை உரிமைகளையும் கடமைகளையும் உணர்ந்து ஏற்றவாறு நடந்துகொள்ளவேண்டிய அவசியத்தைப் பஞ்சாயத்துகள் கற்பித்துப் பழக்கியும் வருகின்றன. இவற்றில் ஜனங்களுக்கு வோட்டுரிமையை உபயோகிக்க அனுபவம் ஏற்படுகிறதென்பது மாத்திரமில்லை; ஜனங்கள் செட்டாகவிருந்துப் பொதுநல வசதிகளுக்காகத் தாங்களே வரிகொடுக்க வேண்டுமென்ற பொறுப்பையும் உணர மார்க்கமு மேற்படுகிறது. நமக்குப் பூர்ண சுயஆட்சி ஏற்பட முயற்சிகள் நடந்துவரும் இத்தருணத்தில் நம் ஜனங்கள் ராஜியப்பொறுப்பை வகிக்கும் அனுபவம் இந்த பஞ்சாயத்துகளினால் ஏற்படுகிறது.

கவர்ன்மெண்டு நிர்வாகம் ஸ்தலஸ்தாபனங்கள் மூலமும், மாகாணமூலமும், மத்திய கவர்ன்மெண்டு மூலமும் ஆகிய மூன்று வழிகளால் நடைபெறுகிறது மாகாண மத்தியநிர்வாகத்தைப்பற்றித் தற்சமயம் நமக்கோர் பொறுப்பில்லையெனினும், ஸ்தல ஸ்தாபனங்களில் திறமையான ஆட்சியிருந்தால்தான் சட்டசபை மூலமும் இதரவழிகளிலும் நம் பொதுஜன சேவர்கள் திருப்திகரமாக வேலை செய்ய முடியுமென்பதை நாமறிந்துகொள்ளவேண்டும். பொறுப்பாட்சி ஏற்பட்டபோதிலும் நல்ல கவர்ன்மெண்டு என்று ஒன்று நடப்பதற்கிணையாகாது என்று கூறுபவரும் சிலருளர்.





ஏதேச்சதிகாரம் மாறி சுதந்தர ஆட்சி ஏற்படுவதற்கு முன்னால் உள்ள இடைக் காலத்தில் கவர்ன்மெண்டு நிர்வாகத் திறமையும் உபயோகமும் சிறிது பாதிக்கப்பட்டிருக்கிறதென்பதை ஒப்புக்கொள்ளவேண்டியதே. இருந்தாலும் இவ்விதத் தீமை நீடித்திருக்காமல் இடைக் காலத்தை எவ்வளவு குறைக்கமுடியுமோ அவ்விதம் செய்ய வேண்டியதவசியம். அதேசமயத்தில் ஜனங்கள் வோட்டுரிமையைச் சரிவர உபயோகித்து ராஜியப் பொறுப்பை வகிப்பதற்கானவழியில் பயில்விக்கப்படவேண்டும். கவர்ன்மெண்டு நன்றாக நடைபெறுகிறதா என்பதைப் பரீக்ஷிக்கவழி, சங்கட மதிகமில்லாமல் யாவும் ஒழுங்காக நடைபெறுகிறதா என்று கவனிப்பதாகாது; ஜனங்கள் பொறுப்பான வழியில் ராஜிய உரிமையைப் பற்றி நிற்கிறார்களா என்பதைக் கொண்டுதான் பரீக்ஷிக்கவேண்டும். கவர்ன்மெண்டு ஜனங்களுடைய சொத்துக்களையும் உயிரையும் எவ்வளவு நன்றாகப் பாதுகாத்தபோதிலும், இன்னலுற்ற காலத்தில் ஜனங்கள் அதற்கேற்றப் பரிகாரம் தேடிக்கொள்ளும் சக்தியற்றிருப்பார்களேயாகில், நல்ல கவர்ன்மெண்டு என்னும் பேர் அதற்குப் பொருந்தாது. ஒரு தேசத்திற்கு அதன் ஜனங்களே பெரியதோர் திரவியமாகையால், அவர்கள் புத்திசாலித்தனம் நற்குணங்களற்றிருப்பார்களே யாகில், எவ்வித அர்த்த சாதனங்களிருப்பினும் அவை யாவும் பதரேயாகும். மிருக உணர்ச்சி மாத்திரம் வலுத்து நிற்கும் ஜனங்களைக் கட்டியாளுவது ஒரு கவர்ன்மெண்டிற்குப் பெருமை யளிக்கக்கூடிய விஷயமல்ல. ஜனங்கள் எவ்வளவுக்கெவ்வளவு சுருசுருப்பாகவும், சகலத்துறைகளிலும் மேதாவிகளாகவும், சமூகத்தின் நன்மையையும், சந்தோஷத்தையும் பெருக்க வல்லவராகவும் இருக்கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களை யாளும் கவர்ன்மெண்டின் திறமையும் விளங்கும் இவ்வித நோக்கங்களைச் சாதிக்கக் கிராமப் பஞ்சாயத்தே முக்கிய சாதனமாயிருக்கும். இந்தப் பஞ்சாயத்துகள் நம் நாட்டில் ஆதிகாலத்தில் உலகம் வியக்கும் வகையில் ஆட்சி புரிந்துவந்த ஜனநாயக முறையைத் தழுவி அமைக்கப்பட்டுள்ளன. பண்டை கால ஜனநாயக நிர்வாகம், எந்த ராஜா எந்தப் பட்டத்திலேறினாலும், அதனால் பாதிக்கப்படாமல் அழிவுற்று நீடித்து வந்திருக்கிறது. ஜனங்களுடைய சமூகக் கட்டுப்பாடும் ஒழுக்கமும் அதனால் ஆயிரக் கணக்கான வருஷங்களாகியும் வீரியம் குன்றாது ஓங்கி நின்றுளது. சென்ற 100 வருஷங்களாக, பிரிட்டிஷ் ஆட்சியின் பயனாக மத்திய கவர்ன்மெண்டில் பொறுப்பேற்பட்டதனால், ஜனங்கள் தற்கால உலக தத்துவத்தைத் தழுவி தனித்தனியே தங்களுடைய சொந்தப் பெருமையைப் பெரிதாகக் கருதத் தலைப்படலாயினர்.

## பஞ்சாயத்துகளின் நோக்கம்.

ஒரு சமூகத்தின் பொது நன்மைக்கு யாவருமாகச் சேர்ந்து பாடுபடவேண்டுமென்றும், ஒவ்வொருவரும் ஒரு சமூகத்தின் ஒரு பகுதியென்றும் எண்ணமிருப்பதனால் சமூகத்தின் பலம் தளர்ச்சியடைந்துவிட்டது. மேற்கூறிய உணர்ச்சி இன்னும் அடியோடழிந்துபோய் விடவில்லை. அந்த உணர்ச்சியை மீண்டும் வலுக்கச் செய்துக் கிராமங்களின் செல்வாக்கையும். பலத்தையும் பெருக்கவேண்டுமென்பதையே நோக்கமாகக்கொண்டு கிராமப்பஞ்சாயத்துகள் பாடுபடவேண்டும். ஜனங்கள் பரஸ்பர நன்மைக்காகக் கட்டுப்பாடாகவும், நல்லெண்ணத்துடனிருக்கவும், காலத்திற்கேற்ற வசதிகளைச் செய்துகொடுக்க ஜனங்கள் ஒத்துழைக்கவேண்டிய

தற்கும் ஆன ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது இப்பஞ்சாயத்துகளின் கடமையாகும். கிராமப் புனருத்தாரண வேலையென்று கூறப்படும் நாட்டுப்புற முன்னேற்ற வேலை செய்வதுதான் கிராமப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்படுவதன் நோக்கம். இந்த நோக்கத்தை உணர்ந்தே உங்கள் ஜில்லா போர்டு பல வருஷங்களுக்கு முன்னிருந்தே கிராமப் புனருத்தாரண வேலை, பஞ்சாயத்தமைப்பு முதலியவற்றைச் செய்துகொடுக்கப் பிரத்தியேகமாக ஆள்களைப் பயிற்சி செய்துவந்திருக்கிறது. இதே காரணம்பற்றியே, மதராஸ் மாகாணக் கூட்டுறவு யூனியன், தமிழ்நாடுக் கூட்டுறவு ஐக்கிய சங்கம், இந்திய ஊழியர் சங்கம், கிறிஸ்தவ வாலிபர் சங்கம் முதலிய ஸ்தாபனங்கள் மேற்கொண்டுள்ள கிராமப் புனருத்தாரண வேலையில் கிராமப் பஞ்சாயத்தமைப்பை முக்கியமான வேலை திட்டமாகக்கொண்டிருக்கிறது. கிராமப் பஞ்சாயத்து வேலை நோக்கம் அதி விசாலமாயிருக்கக்கூடாதென்ற உத்தேசத்துடன் புதிய ஸ்தல ஸ்தாபனச் சட்டம் ஏற்பட்டிருக்கிறது.

நம்மாகாணத்தில் சுமார் 4,000 பஞ்சாயத்துகளிருக்கின்றன. சில வருஷங்களுக்கு முன் சிற்சில பஞ்சாயத்துகள் சரியாக வேலைசெய்யாமலிருந்தன. அவற்றை ரத்துசெய்தோ, எச்சரிக்கை செய்தோ நிவர்த்தித்தாகிவிட்டது. பஞ்சாயத்துகள் அமைப்பு எங்கும் ஒரே சீராகவில்லை. உதாரணமாக வட ஆற்காடு ஜில்லாவில் ஏராளமானப் பஞ்சாயத்துகளிருக்கின்றன. இதர ஜில்லாக்கள் பலவற்றில் அவ்வளவில்லை. இவற்றிலு மனேகப் பஞ்சாயத்துகள், பள்ளிக்கூடங்கள் மாத்திரம் நடத்துகின்றமையால் அவற்றிற்குப் பள்ளிக்கூடக் கமிட்டிகளென்றபேர் ஏற்பட்டுவிட்டது. ஒன்றுமே இல்லாததற்கு இம்மட்டிலேனு மேற்பட்டது ஒரு காரியத்திற்கு நல்லது. ஏனென்றால், பல வருஷங்களாகப் பள்ளிக்கூடமேயில்லாத இவ்வூர்களில் இந்த முயற்சியுமில்லாவிடில் படிப்பு வாசனையே இல்லாமற்போய்விடும். கிராமங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவிதமான குறையிருப்பது சகஜமே. ஜலமில்லாத உலர்ந்த பிற்போக்கான பிரதேசங்களில் பள்ளிக்கூடங்களும் கிணறுகளுமே அதியவசியமாகின்றன. சேலம் ஜில்லாவில் பலவருஷங்களாக மழையேயில்லாமல் தண்ணீர்ப் பஞ்சமேற்பட்டுவிட்டதனால் அங்கு ஏற்பட்டப் பஞ்சாயத்துகள் கிணறுகளை ஆழமாக வெட்டுவதற்காகவே தோன்றின. பஞ்சாயத்து ரெஜிஸ்திரார் ஜனரலிடமிருந்து கிடைத்த பாதி கிராண்டுத்தொகையை இப்பஞ்சாயத்துகள் மேற்கூறிய நோக்கத்தைப் பூர்த்திசெய்வதில் செலவிட்டன. வட ஆற்காடு ஜில்லாவில் விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றுள்ள அவாவினால் பஞ்சாயத்துகளேற்பட்டன. கிருஷ்ணா, கோதாவரி ஜில்லாக்களில் வண்டிப் போக்குவரத்துச் சாதனங்களில்லாத பெருங்கஷ்டத்தை நிவர்த்திக்கப் பஞ்சாயத்துகள் தோன்றியிருக்கின்றன.

உங்கள் ஜில்லாவிலோ அல்லது கிழக்குக் கோதாவரி ஜில்லாவிலோ ஏற்பட்டுள்ளப் பஞ்சாயத்துகள் அவ்வளவு அதிகமில்லை. இதனால் வருத்தப்படவேண்டியதில்லை. ஏனென்றால், ஒரு வேலைப்பயன் அளவைக்கொண்டு மதிப்பிடப்படக்கூடாது. குணம் திறமையே முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம். ரோடுகள் ஜல சப்ளை வசதிகள் திருப்திகரமாகப் பூர்த்திசெய்யப் பட்டிருப்பதைக்கொண்டு நிதானிக்குமிடத்து உங்கள் ஜில்லாப் பஞ்சாயத்துகள் நல்ல வேலை செய்திருப்பது ஏற்படுகிறது. கவர்ன்மெண்டு கொடுக்கும் கிராண்டுத் தொகையில்





பெரும்பாகம் கோதாவரி ஜில்லாக்களில் செலவாகி விடுகிறதென்று ஸ்தலஸ்தாபன போர்டு இன்ஸ்பெக்டர் தம் ரிபோர்ட்டில் கூறியிருக்கிறார். அவர் வசம் கொடுக்கப்பட்ட 6 லக்ஷ ரூபாய் கிராண்டில் இந்த ஜில்லாக்கள் மாத்திரம் 1929 30, 1930-31-ம் வருஷத்தில் 1·75 லக்ஷம் பெற்றிருக்கின்றன. 1930-31-ம் வருஷ ரிபோர்ட்டில் தாடேப்பள்ளிக்கூடம் தாலுகாவில் சென்ற நான்கு வருஷங்களில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள பின் வரும் வேலை விவரங்களைக் கவனிக்குமிடத்து, அத்தாலுகாவின் பெருமை விளங்கும்.

| | ரூ. |
|---|---|
| 1927-28 ... ... ... | 4,046 |
| 1928-29 ... ... ... | 12,769 |
| 1929-30 ... ... ... | 55,440 |
| 1930-31 ... ... ... | 1,33,773 |

இப்பஞ்சாயத்துகளின் உபயோகத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமானால், பஞ்சாயத்துள்ள இதர தாலுக்கா போர்டுகளும், பஞ்சாயத்தில்லாத தாலுகா போர்டுகளும் செய்துள்ள வேலை விவரத்தைக் கவனித்துப் பார்த்து இத்துடன் ஒத்துப்பார்த்தால் விளங்கும்.

இந்த ஜில்லாவில், ஜில்லா போர்டும் இந்த தாலுகா போர்டும் பஞ்சாயத்துகளிடம் கொண்டுள்ள பரிவைக் கவனிக்க விசேஷத் திருப்தி ஏற்படுகிறது. இந்த ஜில்லாவெங்குமுள்ள எல்லா தாலுகா போர்டுகளும் இவ்விதமே நடந்துகொள்ளுமேயாகில் மிகவும் பாராட்டக்கூடியதாயிருக்கும். தவிரவும், தாடேபள்ளியில் ஜில்லாப் பஞ்சாயத்துச் சங்கம், தாடேபள்ளிக்கூடம் தாலுகாப் பஞ்சாயத்துச் சங்கம் முதலிய பலவிதச் சங்கங்களேற்பட்டு பஞ்சாயத்து வேலை மும்முரமாக விருத்தி செய்யப்படுவதைக் காணச் சந்தோஷமாயிருக்கிறது.

## சுகாதார வசதிகள்

நீங்கள் இதுகாறும் செய்துவந்துள்ள அரிய வேலைகள் மிகவும் புகழத்தக்கனவென்பதில் சந்தேகமில்லை. எனினும், சுகாதார அபிவிருத்திக்காக நீங்கள் கிராமங்களில் ஸ்திரீகளுக்காகவென்று கக்கூஸ்கள் கட்டவேண்டுமென்பது என் வேண்டுகோள். கல்வியிலும், சொத்திலும் உயர்வாக நிற்கும் இந்த ஜில்லாவில் கிராமங்களில் கக்கூஸ் வசதியில்லாதது பெரிய குறையேயாகும். இந்தக் குறையை நிவர்த்திக்கப்போதிய பணம் எல்லாப் பஞ்சாயத்துகளிடமுமிருக்கிறது. துவாரம் வைத்துக் கட்டப்படும் கக்கூஸ் சௌகரியமானதென்றும், இதற்காகக் கவர்ன்மெண்டு விசேஷ உதவிபுரியத் தயாராயிருப்பதாகவும் கூறப்படுகிறது. இவ்வகையான கக்கூஸையோ அல்லது, பஞ்சாப்பில் பிரசித்தமாகவிருப்பதாகக் கூறப்படும் குழி கக்கூஸையோ கட்டுவது நலமாகும். குழி கக்கூஸுக்குத் தேவையான குழிகள் பஞ்சாப்பில் கர்கயான் என்னும் கிராமத்திலேயே செய்யப்பட்டனவென்று அதன் காரண பூதராகிய மிஸ்டர் ப்ரேயின் கூறியிருக்கிறார். இவை சாதாரணமாக 6 அடி நீளம், 4 அடி அகலம், நான்கு அல்லது ஐந்தடி ஆழமிருக்கும். இக்குழிகளை வயலிலோ அல்லது வீட்டுப் புறக்கடையிலோ புதைத்துவிடலாம். இக்குழியில் வீட்டில் சேரும் சாம்பல் குப்பை முதலியனவற்றைப்போடலாம். அதையே

கக்கூஸாகவும் உபயோகிக்கலாம். இக்குழிகள் நிறம்ப 4 அல்லது 6 மாதமாகிறதாம். அப்பால் அவற்றை வயலுக் கப்புறப்படுத்தி எருவாக உபயோகிக்கலாம் எல்லா கக்கூஸ்களையும் மறைவாக எடுத்துக் கட்டவேண்டும். என் ஊராகிய மைசூரில் தோட்டிக ளில்லாத விடங்களில் கிராமங்களிலும், முனிஸிபாலிடிகளிலும் பெரும்பாலும் இத்தகைய குழிகளே உபயோகத்திலிருந்து வருகின்றன.

இந்த மாதிரிச் செய்ய நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிடினும், தேக சௌக்கியம், சௌகரியம், மானம் இவற்றைக்கருதி கக்கூஸ் என்பது காட்டப்படவேண்டியது அதியவசியமாகும். இதற்காக இதர வேலையையும் நிறுத்தவேண்டியிருந்தால், அவ்விதமே செய்யலாம்.

சௌகரியமான வசதிகளிருக்கும் பஞ்சாயத்துகள் எல்லாவற்றிலும் கட்டாயக் கல்விமுறை யனுஷ்டிக்கவேண்டுமென்பது நான் உங்களைக் கேட்டுக்கொள்ளும் இரண்டாவது கோரிக்கை. இது மாகாண கவர்ன்மெண்டின் முக்கிய பொறுப்பாகையால் ஸ்தலஸ்தாபனங்கள் சிந்தைசெய்ய வேண்டிய தனாவசியமெனச் சிலர் கூறலாம். மாகாண கவர்ன்மெண்டு கட்டாயக்கல்வி போதிக்க முன் வரும்வரைக் காத்திருப்பதென்றால் பல வருஷங்களாகும். உங்கள் ஜில்லாவில் எல்லாப்பஞ்சாயத்துகளிலும் பள்ளிக்கூடங்க ளிருப்பதுடன் ஜனங்களும் பெரும்பாலும் கல்வி யறிவும் பண சௌகரியமுமுற்றிருப்பதனால் கட்டாயக் கல்வி ஏற்படுத்துவது சிரமமாகாத விஷயம். கட்டாயக் கல்வி போதிக்கும் அதிகாரம் கவர்ன்மெண்டு வசமிருந்தபொழுது கட்டாயக்கல்வி யனுஷ்டிக்க வேண்டுமென்று பலமாகக் கிளர்ச்சிசெய்து வந்தோம். இப்பொழுது நம் கையில் அந்த அதிகாரம் வந்துவிட்டபடியால் நாம் முன்னேறிச்செல்ல வழிதேடவேண்டிய தவசியமாகிறது. உங்கள் பஞ்சாயத்துகளைவிட சௌகரியக் குறைவுற்றிருக்கும் பஞ்சாயத்துகள் சில கட்டாயக்கல்வி போதித்து வருவதையும் கவனிக்கவேண்டும். இதை ஆழ்ந்து யோஜனைசெய்து, ஆரம்பமாக அடுத்த வருஷத்தில் சில பஞ்சாயத்துகளிலேனும் கட்டாய ஆரம்பக் கல்வி போதிக்க வழி தேடவேண்டும்.

புதியதாக இயற்றப்பட்டுள்ள ஸ்தல ஸ்தாபன சட்டத்தைப்பற்றி விரிவாகப் பேசப் போதிய நித்தியானுபவம் எனக்கில்லாததனால் நான் அவ்வாறு செய்யவில்லை. இரண்டாவதாக அச்சட்டம் அமுலுக்குவந்து சொற்பகாலமே யாகிறபடியால் அதன் பலாபலன்களை இதற்குள் கூறவும் முடியாது. இம்மகாநாட்டில் உங்களுக்கேற்பட்டிருக்கும் அனுபவம் எடுத்துக் கூறப்படுமென்று மதிக்கிறேன். இச்சட்டத்தில் ஒரு முக்கிய விஷயமுண்டு. நிலவௌஸ் வருமானத்தில் பஞ்சாயத்துகளுக் கொருபாகமுண்டென்பது இதில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. நிலவரி வருமானத்தில் ரூபாய்க்கு ஒரு அணு வீதம் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்படும் பக்ஷத்தில் நலமாயிருந்திருக்கும். இருந்தாலும், இச்சட்டப் பிரகாரம் கிராம அபிவிருத்தி நிதி ஏற்பட்டிருக்குமிடங்களில் அந்தந்த கிராமத்தில் அந்நிதியில் சேரும் பணத்தைக் கொடுக்குமாறு பஞ்சாயத்துகள் வற்புறுத்த இடமிருக்கிறது.

---



# விவசாயம்.

## அபிவிருத்திக்குச் சில சாதனங்கள்.

(ஸ்ரீமான் எம். பி. நாயுடு)

மனிதர்கள் செல்வம் செல்வம் என்று பறக்கிறார்கள். ஆனால், செல்வத்தைத் தேடும் முறை தெரியாமல் உத்யோகம் என்ற புனைப்பெயரால் அழைக்கப்படும் அடிமைத்தொழிலும், கண்டிராக்ட் என்று சொல்லுகிற ஒப்பந்த வேலையிலும், 'ஸ்பெகுலேஷன்' என்று சொல்லப்படுகிற சூதுவிளையாட்டிலும் பொது ஜனங்களைக் கெடுக்கும் சாராயம், கள் முதலிய லாகிரிகளின் விற்பனையிலும் பலர் ஈடுபடுகிறார்கள். ஏழைகளை வருத்தி செல்வத்தைச் சம்பாதித்துச் சுகமாக வாழ்ந்திருப்போர், இருக்கப்பட்ட செல்வம் போதாமல் அதிக செல்வத்தைச் சம்பாதிக்கவேண்டுமென்கிற கவலையால் பீடிக்கப்பட்டுப் பரம ஏழைகளாகப் பரிதவிக்கும் கோடிக்கணக்கான ஜனங்களின் பணத்தை வஞ்சித்து அபகரித்துக் கடைசியில் பாப மூட்டையுடன் சாகிறார்கள்.

பாபம் இல்லாத தொழில் விவசாயமே தவிர வேறொன்றுமில்லை, செல்வம் அளிக்கப் பூமிதேவியும் வருணபகவானும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குத்தான் ஜாதி வித்தியாசம், தாக்ஷண்யம் முதலியவை இல்லை. பெரியோர்களால் வகுக்கப்பட்ட நவகண்டங்களில் எல்லா வளங்களாலும் மேன்மைபெற்று விளங்குவது இப்பரத கண்டமே. அவ்வாறு மேன்மையடைவதற்குக் காரணம் பயிர்த்தொழில் முக்கியமான தொழிலாக இங்குகொள்ளப்பட்டதுதான். "உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர். பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்ற பிரமாணத்தின்படி நம் முன்னோர்களால் கொள்ளப்பட்டதும், அவ்வாறு கொள்ளப்பட்டு அத்தொழிலையே எவற்றினும் மேம்பாடாக நடக்கையில் காட்டிவந்ததும், ஆகிய அந்த ஒப்பு உயர்வு இல்லாத தொழிலானது தற்காலத்தில் நம்மவர்களால் அமுக்கியமாகக் கொள்ளப்பட்டும் அசட்டையாக நினைக்கப்பட்டும் போயிற்று. இதற்குக் காரணம் தற்காலப் போக்கை நாகரீகமாகக் கொண்டுதிரிவதேயாம்.

நம்முன்னோர்கள் பயிர்களைச் செழிப்பாக்கக் கூடிய மார்க்கங்களைத் தொன்று தொட்டு கையாண்டு எவ்வளவோ செல்வத்தை அடைந்திருந்தார்கள். அக்காலங்களில் விவசாய டிபார்ட்மெண்ட் நிபுணர்கள் இல்லை. விவசாயக் காலேஜ்களுமில்லை. எங்கு பார்த்தாலும் தான்யவிலை மிகவும் சரசமாக இருந்தது. விவசாயிகள் ஏழைகளாக இல்லை. இப்போது நாகரீகம் அதிகரிக்க சந்து பொந்துகள் எல்லாம் காபி ஓட்டல்களும், ட்ராமாக்கூத்துகளும் சினிமாப் படக் காட்சிகளும், பணத்தைப் பிடுங்குகின்றன. பயிர்களைக் கவனிக்காமல் இதில் எத்தனையோ விவசாயிகள் வாயிதாவுக்கும், கூலிக்கும், கடன் வட்டிக்கும் கொடுக்கமுடியாமல் நஷ்டமடைந்திருக்கிறார்கள்.

நம் நாடோ மிகப் புராதனமான நாடு. இந்நாட்டிலே மிகப்பிரமாண்டமான நதிகள் ஓடுகின்றன. இந்நாட்டிலே மிக உயர்ந்தமலை சிகரங்களிருக்கின்றன. இந்நாட்டில் வசிப்பவர்களோ பிரா[illegible] ஆசாரங்களைப் பற்றிக்கொள்ளாத குணமுடையவர்கள். மேல்நாட்டு நாகரீகத்தை இந்நாட்டிலே ஏற்படுத்தி இங்குள்ள கிராமங்களை அழித்து, விவசாயத்தை மறந்து, நாட்டுப்புறத்திலிருந்து பட்டணம் வந்து படிக்கும் பிள்ளைகள், வண்ணானுக்கும், ட்ரௌசர், பூட்ஸ், டோபி, காபி ஓட்டல், கிரிகட், குத்துச்சண்டை, குஸ்தி, டிராமா, சினிமாக் காக்ஷிகளுக்கும் முன்னோர்கள் க[illegible]ப்பட்ட காசை வீண்செலவுசெய்து விவசாய மார்க்கங்களை மறந்து புதிய நாகரீகத்தில் ஈடுபட்டுவிடுகிறார்கள்.

நம்முடைய தேசம் எத்தகையது என்பதை சற்றே சிந்தித்துப் பாருங்கள். இந்நாட்டிலே 7,00,000 கிராமங்கள் இருக்கின்றன. இது 19,000 மைல்கள் நீளமுள்ளதும் 15,000 மைல்கள் அகலமுள்ளதுமான ஓர் பெரிய கண்டமாகும்.

## கிராமப் பஞ்சாயத்து

இக்கிராமங்கள் இன்று நேற்று உண்டானவையல்ல. பண்டைக்காலந் தொட்டு உண்டானவை.

நமது இந்திய நாடு செழித்த விவசாயபூமிகளை அடைந்துள்ளதாயிருந்தும், விவசாயச் சீர்திருத்தங்கள் சரிவரச் செய்யாமல் சொற்ப பலனையடைந்து மேலான பலன்களை யடையாமல் அதிகப் பலன் கொடுக்கக்கூடிய மார்க்கங்களையும் தேடா திருப்பது மிகவும் வருத்தமான விஷயமே. பெரிய படிப்புகளுக்குச் செலவழித்த பணத்தைக்கொண்டு விவசாயச் சீர்திருத்தங்களைக் கற்றுக்கொண்டால் நமது நாடு எவ்வளவோ செழிப்பாகயிருக்கும். கஷ்டப்பட்டு விவசாயம் செய்கிறவர்களுக்கு வருஷமுழுதும் தரித்திரம் கிடையாது. பிறருடைய தாக்ஷண்டம் தேவையில்லை. தாம்பிரபரணி, காவேரி, கிருஷ்ணை, கோதாவரி, ஸிந்து, கங்கை முதலிய திவ்ய நதிகள் பாய்கின்ற பிரதேசங்கள் நிலவளம், நீர்வளங்களில் எந்த நாட்டிற்கு இணைத் திருக்கமுடியும்? நாம் பயிர்த் தொழிலில் ஐரோப்பியர்களுக்கும், அமெரிக்கர்களுக்கும் இவ்வளவு பின்னே இருக்கமாட்டோம் ஆனால், பயிர்த் தொழிலுக்கு அதிகமாகக் கூலியாட்களும், கால் நடைகளும் தேவை. சிலவருஷங்களுக்கு முன்பாக நமது நாலடிவிருந்து ஏராளமாகக் கூலிகளைப் பயிர்த் தொழிலுக்காக சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ், பிஜி, ஆப்ரிக்கா தேசங்களுக்குக் கொண்டுபோய், அந்நாட்டில் பூமிகளைச் சீர்திருத்தங்கள் செய்துகொண்டு மரங்கள் இல்லாத காடாகயிருந்த இடமெல்லாம் மரங்களும், கரும்புத்தோட்டங்களும், டீ, காபி, ரப்பர்த் தோட்டங்களும், புஷ்பம், பழத்தோட்டங்களும், தான்யம் பயிரிடும் கழனிகளும், எங்கு பார்த்தாலும் பிரம்மாண்டமான கிணறு, குட்டை, குளங்களும், ஏற்படுத்திக்கொண்டு, 'இப்போது 'இந்தியக்கூலிகள் தேவை இல்லை, நாங்களே இந்த வேலைகள் செய்துகொள்வோம்' என்றுஆயிரம் ஆயிரமாக ஏழை ஜனங்களைத் துரத்திவிடுவதை நாம் பார்க்கலாம். இந்த ஏழை ஜனங்களை நமது காருண்ய இந்தியா பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நம் நாட்டிற்கு காசு இல்லாமல் தர்மத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு நாம் நன்றிபாராட்டவேண்டும். இந்த ஆயிரக்கணக்கான ஏழை ஜனங்கள் நம் நாட்டிற்குத் திரும்பிவந்தது நமது நன்மைக்கே என்று சொல்லவேண்டும். பயிர்த்தொழிலுக்குக் கூலி ஆட்கள் அதிகமாகக் கிடைப்பார்கள். இனிமேல் நமது நாட்டிற்குப் பஞ்சமே கிடையாது.

ஆனால், கால் நடைகளை ஏற்றுமதி செய்ததெல்லாம் திரும்பி வாரதைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். காமதேனுக்குச் சமானமான பசுக்கள் மாம்ஸ போஜனத்திற்கு உபயோகப்பட்டன. விவசாயம் செய்கிற ஒவ்வொருவரும் கால் நடைகளை அபிவிருத்திசெய்ய முயலவேண்டும். பணத்திற்கு ஆசைவைத்துக்கொண்டு சோக்களை அயல் நாட்டாருக்கு மாம்ச பக்ஷணத்திற்கு ஏற்றுமதி செய்யவும், பாப தோஷமஞ்சாமல் கால்நடைகளைக் கசாய்க்காரருக்கு விக்ரயம் செய்வதும் கூடாது. முக்கியமாக இவைகளின் சாணத்தைப் பத்திரப்படுத்தி ஏராளமாக நிலத்துக்கு உபயோகப்படுத்தி அதிகப் பலனையடையலாம் என்று மேல் நாட்டாரும் ஒப்புக்கொள்கிறார்கள். உலக முழுவதும் உள்ள புத்திசாலிகளான விவசாயிகளுக்குக் கால்நடைகளால் எவ்வளவோ நன்மைகள் இருப்பது தெரிந்த விஷயம். கால் நடைகளை வைத்துக்கொண்டு ஒரு குடும்ப சம்ரக்ஷணை செய்யலாம். கொலையாளிகளுக்கு விக்ரயம் செய்வது தர்மம் அல்ல.

இனிமேல் படிக்கிறவர்களும், படிக்காதவர்களும், விவசாயிகளும் கவனத்துடன் விவசாயச் சீர்திருத்தங்களை கற்றுக்கொள்ள முயற்சிசெய்தால் தரித்திரம் நமது பரதநாட்டைவிட்டுச் சொல்லாமல் ஓடிப்போகும். ஒவ்வொரு கிராமத்திலும் கைத்தொழில், விவசாயம் ஓங்குவதுடன் சுதேசி உடைகளை தரிக்கவேண்டும். கள், சாராயம் குடிப்பழக்கத்தை ஒழிக்கவேண்டும். சொற்ப காசுக்கு ஆசைப்பட்டு, தென்னை, பனை, ஈச்சமரங்களைக் கள் இறக்கக் குத்தகைக்கு விடக்கூடாது.

சு. மி.



## இந்திய சாமான்களை ஏன் வாங்கவேண்டும்?

### சில காரணங்கள்.

"மாராட்டா" பத்திரிகையில் பின் வரும் விவரம் காணப்படுகிறது :—

ஒவ்வொரு தாயும் தந்தையும் தங்களுடைய குழந்தைகளை நேசிக்கிறார்கள். தங்களுடைய சொந்தக் குழந்தைகளாக அவை இருப்பதே அதற்குக் காரணம். அவ்விதமே நாமும் விவசாயமுள்பட நமது நாட்டுத் தொழில்களை நேசித்துப் பாதுகாக்கவேண்டும.

* * * *

அவ்விதம் செய்வதால் நமது தேசத்தினருக்கு நாம் வேலை தேடிக் கொடுக்கிறோம். நமது பணத்திற்குப் பொக்கிஷம் ஏற்படுகிறது. லாபம் நமது தேசத்திலேயே இருக்கிறது. அந்த லாபத்தை வேறு தொழில்களுக்கும் நமது ஜனங்களுடைய வாழ்வுத் தரத்தை உயர்த்தவும் நாம் உபயோகிக்கிறோம்.

* * * *

தொழில் பெருத்த தேசங்கள்தான் உலகத்தில் அதிகச் செழிப்பும் சக்தியுமுடையவைகளாக இருக்கின்றன. அவைகள் உலகை ஆளுகின்றன. நாமும அவ்விதமே செழிப்பும் சந்துஷ்டியுமடையவேண்டும்.

* * * *

நமது தேசத்தில் 35 கோடி ஜனங்களிருக்கிறார்கள். கோடிக் கணக்கானவர்களுக்கு வருஷத்தில் அதிக காலம் வேலையில்லாமலிருக்கிறது.

* * * *

அவர்களுக்கு வேலை தேடிக்கொடுத்து, திருப்திகரமான வாழ்வை அவர்கள் நடத்திவரும்படி செய்வது நமது கடமை.

* * * *

அந்நிய நாட்டுச் சாமான்கள் வெகு அழகாகவும் உபயோகமாகவுமிருந்தபோதிலும் அவைகளை வாங்குவதால் அவைகளைத் தயாரிக்கும் பொறுப்பும் பெருமையும் நமக்கு ஏற்படாமற் செய்துகொள்ளுவதோடு, பிறரைக் கொழுக்கவைத்து நம்மை தரித்திரர்களாக்கிக்கொள்ளுகிறோம்.

* * * *

கிரேட் பிரிட்டனில் வேலையில்லாமலிருப்பவர்களுக்காக பிரிட்டிஷ் சாமான்களை வாங்கவேண்டுமென்று அங்குள்ள ஜனங்களை வேண்டிக்கொள்ளுவதுபோல் இந்திய சாமான்களை வாங்கும்படி இங்குள்ளவர்கள் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

* * * *

இந்தியர்களுடைய வீடுகளில் தினசரி உபயோகத்திற்கு வேண்டியிருக்கும் பல சாமான்களை இந்தியா இப்பொழுது உற்பத்தி செய்கிறது.

* * * *

கிரமமான விலைக்கு இந்திய ஆதாரப்பொருள்களும், இந்தியத் துணிகளும், இந்தியப் பாத்திரங்களும், பலவகைப்பட்ட இந்திய சாமான்களும், பட்டணங்களில் கிடைக்கும். சிறிது அதிக விலை கொடுக்கவேண்டியிருந்தாலும், சரக்கு சிறிது

மட்டமானதாக இருந்தாலும், இந்திய சாமான்களை வாங்குவது தேசத்திற்கு நீங்கள் செய்யவேண்டிய கடமையாகும்.

* * * *

ஆனால் சாமான்களை வாங்கச்செல்லுவோர் இந்திய சாமான்கள் வேண்டுமென்று கேட்காமல் கடைக்காரர்கள் கொடுப்பதை வாங்கிக்கொண்டு வந்துவிடுவது வருந்தத்தக்கதாக இருக்கிறது.

* * * *

சரியான சாமான்கள் கிடைக்கவில்லையென்றோ அல்லது உங்களுக்கு வேண்டிய சாமான் கடையிலில்லையென்றோ நீங்கள் சொல்லலாம்.

* * * *

அது ஏன் தெரியுமா? நீங்கள் வாங்காத சாமான்களைத் தேக்கி வைத்துக் கொள்ளுவது கடைக்காரருக்கு லாபகரமானதாக இருக்கவில்லை. இந்திய சாமான் வேண்டுமென்று கேளுங்கள். இந்திய சாமான்களை அவர் வாங்கி வைத்துக்கொள்ளுவதற்கு ஊக்கமளியுங்கள். அப்பொழுது உங்களுக்கு வேண்டிய சாமான் கிடைப்பதோடு விலையும் மலிவாக இருக்கும். தேவை அதிகரிப்பதற்குத் தகுந்தபடி சரக்கும் நல்லதாகி விடும்.

* * * *

நீங்கள் ஒரு பஞ்சாயத்து அல்லது சங்கத்தின் அங்கத்தினரா? கல்யாணம், கருமாதி முதலியவைகளுக்குச் சுதேசி சாமான்களையே வாங்கவேண்டுமென்ற உணர்ச்சி உங்களுடைய சகாக்களுக்கு ஏற்படும்படி செய்யுங்கள். அந்த சந்தர்ப்பங்களில் ஆயிரக்கணக்கான ரூபாய செலவிடப்படுகிறது அந்தப் பணம் தேசத்திற்கு மிஞ்சும்படி செய்வது உங்களுடைய கடமை.

* * * *

உங்களிடம் ரொக்கமிருக்கிறதா? உங்களுடைய ஊரில் அதைக்கொண்டு ஒரு சுதேசி ஸ்டோரை ஏற்படுத்துங்கள். மற்றவர்களையும் சேர்த்துக்கொண்டு சுதேசிப் பொருட்காக்ஷியை நடத்துங்கள் சந்தைகளுக்கும் உற்சவங்களுக்கும் உங்களுடைய சாமான்களைக் கொண்டுபோய் அந்த இடங்கள் சுதேசிக் கோயில்களாக விளங்கும்படி செய்யுங்கள்.

* * * *

சுதேசியமானது பார்த்துப் பார்த்துத்தான் பரவுகிறது. நீங்கள் ஏழையாயிருப்பதாலும், சாமான்யராக இருப்பதாலும், தேசத்திற்கு ஒன்றும் செய்யமுடியாதென்று நினைத்து விடாதீர்கள். சுதேசிய வாழ்வை நடத்தி வருவதாலும் சுதேசியத்தை நேசிப்பதாலும் லக்ஷக் கணக்கானவர்கள் இந்த வேலையைச் செய்யலாம், லக்ஷக் கணக்கான ரூபாய் இதனால் மிச்சப்படும், லக்ஷக் கணக்கான ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் லாபகரமான பிழைப்பு ஏற்படும். தேசமெங்கும் சுதேசிமயமாகி விட்டால் பொருளாதார சுயராஜ்யம் ஏற்பட்டுவிடும்.

* * * *

இந்திய சாமான்களை வாங்குங்கள்; இந்திய சாமான்களை அணிந்துகொள்ளுங்கள்; இந்திய சாமான்களை நேசியுங்கள்.



160214

# பொது விளம்பரம்.

---

தாலூகா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள் பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து, கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிரூபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவுமிருத்தல்வேண்டும். கொஞ்சமிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு ஏதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிரூபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிரூபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.

---

## கேரள சந்தனச் சோப்பை வாங்குங்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் வீட்டிலும் சுகத்தையும் ஆனந்தத்தையும் அளிக்கும் சோப்பு இதுவே.

மிகவும் சிறந்த நறுமணம் பொருந்தியது

கோடையில் மிகுந்த குளிர்ச்சியையும், பரிமளத்தையும் கொடுக்கும்

வெகு சிறந்த சோப்பும் இதுவே.

கேரளச் சோப்பு இன்ஸ்டியூட்,
கள்ளிக்கோட்டை.

## இராஜவழி

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் கஷ்டங்களை நீக்கி ஆரோக்கிய ஐஸ்வரிய மென்னும் இராஜவழியில் நிறுத்துவது

### எங்கள் காம சாஸ்திரம்

ஆரோக்கியம், ஐஸ்வரியம் சுக சௌக்கியம் இவைகளை காட்டும் அரிய நூல் கேட்போருக்கு இனமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, சென்னை.



பத்திராதிபர்.—கனம். ஜி. ஹரிஸர்வோத்தமராவ்-எம்.ஏ.
அச்சிடுவோர்.—மத்தியக் கூட்டுறவு அச்சு இயந்திரசாலை,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.



தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

ஆவணைத்தாள்.

சே எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 22/3/95 | 27/3/95 | | |
| | | | |
| 6/5/95 | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.